ஸ்ரீ

ஸ்ரீ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் வேத வித்யா பரிசீலன மண்டலி மூன்றாவது வெளியீடு



# ஸதாசாரம்

நாம் அறிந்து அனுஷ்டிக்கவேண்டிய அரிய ஆசாரங்களும், தர்மோபதேசங்களும்.


ஆசிரியர் :

ஸ்ரீவத்ஸ. வெ. ஸோமதேவ சர்மா.



விசுவாவசு ௵ ஐப்பசி ௴ 7௳

23-10-1965

உ

ஸ்ரீ குருப்யோ நம:

# முகவுரை

---

ஆசாரம் குறைந்து, ஆசாரத்தில் நம்பிக்கையும் குறைந்து வரும் இந்தக் காலத்தில் ஸதாசாரம் என்று ஸ்ரீவத்ஸ ஸோமதேவ சர்மா அவர்கள் பிரசுரித்திருக்கும் இந்தப் புஸ்த்தகம் ரொம்ப இன்றியமை யாததாகும். ஆசாரத்துடன் நடக்கவேண்டும் என்று நினைக்கும் பல ஆஸ்திகர்களுக்கு நம்முடைய ஆசாரம் தெரிந்துகொள் வதற்கு இந்தப் புஸ்த்தகம் ரொம்ப உபயோகமாக இருக்கும். இந்த புஸ்த்தகத்தில் அடங்கியிருக்கும் சில விஷயங்கள் இந்தக் காலத்தில் அனுசரிக்க முடியாது என்று சிலர் கருதலாம். புஸ்த்தகம் பூராவையும் படித்து அதன்படி எல்லோரும் நடக்க முயற்சி செய்யவேண்டும். எல்லோரும் பரீக்ஷையில் நூற்றுக்கு நூறு மார்க் வாங்க முடியாது. ஆனல் நன்ருக படித்து நூறு மார்க் வாங்கவேண்டும் என்கிற நோக்கத்திலேயே நடக்கவேணு மென்பது ரொம்ப முக்யம். ஆகையால் இதில் எழுதி யிருக்கும் எந்த விஷயத்தையும் தள்ளாமல் எல்லா வற்றையும் அனுசரித்து நடப்பதற்கு எல்லோரும் முயற்சி செய்யவேணுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

நவஸ ஜா
23--10—65.

**காரியதரிசி.**

# அவதாரிகை.

ஆசாரம் என்பது தர்மமே ஆகும். ஸத்துக்கள் கைகொண்டதால் ஸதாசாரம், சிஷ்டர் கைகொண்டதால் சிஷ்டாசாரம் எனப்படும். பொதுவாக ஆசாரத்தைத் தர்மம் என்ருலும் தர்மத்திற்கு ஸஹாயமான உபதர்மங்கள் ஸதாசாரமாகும். அதாவது சில இடங்களில் தர்மம் அங்கியாகவும், ஆசாரம் அங்கமாகவும் ஆகும் உதாஹரணமாக ஸந்த்யாவந்தனம் என்பது ஒரு கர்மா. அதே தர்மமுமாம். அதை ஸ்நாநம் செய்து கச்சம் அணிந்து புண்ட்ரமிட்டுக்கொண்டு செய்வது ஆசாரம். ஆசாரமில்லாதவனை வேதம் கூட சுத்தமாக்காது. ஸமயத்தில் கைவிடும். ஆசாரத்தால் நீண்ட ஆயுளைப் பெறலாம். ஆசாரம் லக்ஷ்மியைத் தரும். ஆசாரம் மூதேவியை நீக்கும். ஆசாரத்திலிருந்தே தர்மம் உண்டாகிறது. ஆசாரத்தை விட்டதால் அல்பாயுளாகிருன் என்று பலதர்ம சாஸ்த்ரங்கள் கோஷிக்கின்றன.

கர்மா, அல்லது தர்மம் என்பது பாபம் எனும் நோயை அகற்றும் மருந்து. ஆசாரம் என்பது மருந்துடன் கவனிக்க வேண்டிய பத்யமாம். மருந்து சாப்பிட்டும் பத்யம் இல்லாவிடில் நோய் அகலுவதில்லை. பத்யத்தை நன்ருக கவனித்தால் மருந்தில்லாமலேகூட நோய் அகலும். மந்த்ர தந்த்ரம், கர்மா ஒன்றும் செய்யாத ஒரு வேடன் ஆசாரத்தை மாத்ரம் அனுஷ்டித்து அதனுல் ப்ராம்மண ஜன்மாவை அடைந்தான் என ஒரு புராணம் கூறுகிறது. ஆசாரமில்லாமல் செய்யும் கர்மா பயனைத்தருவதில்லை.

ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் நாடு செழிக்க, நன்மை பயக்க, மக்கள் வாழ, தர்மம் ஓங்க செய்துவரும் கார்யத்தில் வேத தர்ம பரிபாலன ஸம்மேளநம் ஆங்காங்கு சில ஆண்டுகளாக நடைபெறு கிறது. அதில் ஸதாசாரம் என்று ஒரு விஷயத்தை உபன்யஸிக்கும்படி ஆக்ஞை இட்டிருக்கிறார்கள். ஒரு மணி ஆண்டுக்கோர்முறை கேட்டதால் மாத்ரம் ஸதா சாரம் படிவதில்லை. ஆதலால் ஸ்ரீ மஹாஸன்னிதானத் தின் அபிப்ராயத்தை ஒட்டி ஸதாசாரங்களை வைதிக தர்ம வர்த்தினீ எனும் நமது பத்திரிகை வாயிலாக வெளியிட்டு வந்தோம்.

பல ஆஸ்திக சிகாமணிகளின் வேண்டுகோளின்படி அதை இரண்டு மூன்று முறை புத்தக வடிவமாக வெளி யிட்டோம். எதிர்பார்த்ததைவிட விரைவில் அந்த காபிகள் செலவாகிவிட்டன.

ஸ்ரீ ஜகத்குரு சிருங்கேரி பீடாதிபதி ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள் சென்னையில் பல ஸதாசார ஸம்பன்னர்களைக் கொண்டு ஸஹஸ்ர சண்டியாகமும் அதிருத்ரமும் நடத்த, இவ்வாண்டு அவர்களது வர்தந்தி மஹோத்ஸவத்தின் வெளியீடாக ஸதாசார நூல் வருவது மிகப் பொருத்த மானது. சென்ற வர்தந்தி வெளியீடுகளாக அருண ஸூர்ய நமஸ்காரம், கூச்மாண்ட ஹோமம், உபநயன மந்த்ரார்த்தமிவைகளை வெளியிட்ட ஸ்ரீ ஐய்யரவர்கள் இவ் வாண்டு எல்லோருக்கும் உபயோகமான ஸதாசாரத்தை இச்சமயத்தில் வெளியிட்டதற்கு ஸத்துக்கள் ஸந்தோஷ மடைவர்.

## நான்காம் பதிப்பு.

நான்காம் முறையாக இதை வெளியிடும்போது பதினெண் புராணங்களில் காணப்படும் பல அரிய பெரிய விஷயங்களையும் ப்ரத்யேகமாக ஸ்த்ரீ ஆசாரத்தையும் இதில் சேர்த்துளோம். இந்த ஆசாரத்தைக்கைகொண்டால் ஆயுளும் செல்வமும் வளரும். பிணியும், துன்பமும் அகலும். நமது ஆசாரங்களில் உள்ள தத்துவங்களை விக்ஞானிகள் மிகமிகக் கொண்டாடுகின்றனர். பெரியோர் இதைக்கற்பித்து வந்தனர். அத்தகையவர் இல்லாததால் இருந்து கூறினும் அவர் சொல்லைக்கேட்க அவகாசம் இல்லாததாலும் எப்படியாவது ஓழிந்தபோதாவது ஒரு முறையாவது பார்க்கட்டும். சில ஆசாரங்களை யேனும் கற்கட்டும் என இதை வெளியிடுகிரோம்.

ஆஸ்திகர் அடிபணியும்,

**ஸ்ரீவத்ஸ, வெ. ஸோமதேவ சர்மா.**

# நாம் அறிந்து அனுஷ்டிக்கவேண்டிய அரிய தர்மோபதேசங்கள்.

—:o:—

1. ஸூர்யனை உதயமாகும்பொழுதும், அஸ்தமிக்கும் பொழுதும், உச்சியிலிருக்கும்பொழுதும், ஜலத்திலும், க்ரஹணத்திலும் பார்க்கக்கூடாது. த்யானம் செய்ய வேண்டும்.

2. ப்ராம்மணர், ஸுமங்கலி, தேவாலயம், தேவதை, அச்வத்தமரம், பசு இவைகளை ப்ரதக்ஷிணமாகவே செல்ல வேண்டும். அப்ரதக்ஷிணமாகச் சென்ற திலீபமஹாராஜனுக்கு குழந்தை பிறக்கவில்லை.

3. அக்னியை வாயினுல் ஊதக்கூடாது. காலினுல் தாண்டக்கூடாது. கையினுல் தொடக்கூடாது. பூமியில் வைக்கக்கூடாது. ஜலத்தைக்கொட்டி அணைக்கக்கூடாது. காலை தீயில் காய்ச்சக்கூடாது. அசுத்தமான பொருளைப் போடக்கூடாது. அக்னியோடு அக்னியைச் சேர்க்ககூடாது.

4. புண்ய திர்த்தங்களில் வந்தவுடன் காலை வைக்கலாகாது. முதலில் ஜலத்தை தலையில் ப்ரோக்ஷித்துக் கொண்டு, பிறகே கால் அலம்பவேண்டும். வஸ்திரமில்லாமல் குளிக்கக்கூடாது. காரி துப்பக்கூடாது. ஜலத்தில் ப்ரக்ஷாளனம் செய்துகொள்ளலாகாது. ஒரு பாத்ரத்தில் ஜலம் எடுத்தே சுத்தம் செய்துகொள்ளவேண்டும். ஜலத்

தில் ஜலமல விஸர்ஜனம் செய்யக்கூடாது. குளத்தில் கல்லே போடக்கூடாது. புண்ணிய தீர்த்தத்தில் காலே வைத்த பீமனே துன்புற்ருன்.

5. தனக்கே என்று பாகம்செய்வது, புஷ்பம்தொடுப்பது, பாயஸம் பக்ஷணம் செய்வதும் பாபமாகும். பகவானுக்கும் விருந்தினருக்கும் செய்து அளித்த பிறகே நாம் புசிக்கவேண்டும்.

6. இரவில் கால் அலம்பி துடைத்துக்கொண்டு பகவானே த்யானம் செய்துவிட்டு பிறகே படுக்கவேண்டும். வடக்கு முகமாய் தலேவைத்தும், முறிந்தகட்டிலிலும் படுக்கக்கூடாது. பாழான வீட்டில் படுக்கக்கூடாது. தூங்குபவனே எழுப்பலாகாது. பெரியோரை எழுப்புவது மஹா பாபம். இந்திரியங்கள் எல்லாம் மனதில் ஒடுங்கும். அவஸரமாக அரைகுறை தூக்கத்தில் எழுப்பினுல் மனதினிடமிருந்து கண் காது முதலியவை அந்தந்த இடத்திற்குப் போகாமல் கண் சக்தி காதிலும், காது சக்தி மூக்கிலும் புகும். இதனுல் குருடனுகவும், செவிடனுகவும் ஆகக்கூடும்.

7. பஹிஷ்டை என்பது ப்ரும்மஹத்தி வ்ரதம். அந்த மூன்று நாட்களிலும் அவர்கள் அருகே நாம் போகக்கூடாது. பேசவும் கூடாது. நாம் உண்ணும்போது அவர்கள் குரல் கேட்கக்கூடாது. அவர் உண்ட மிகுதி ஜலம், அன்னம் இவைகளே உட்கொள்ளக் கூடாது. நான்காவது நாள் அவர் ஸ்நானம் செய்தாலும் நெருப்பினிடம் சென்று பாகம்செய்தால் அவளுக்கு நோய் உண்டாகும். அதைப் புஜிப்பவனும் அசுத்தனுவான். ஐந்தாவது நாளே சுத்தி.

8. பசுவினிடம் ஸகல தேவர்களும் இருக்கின்றனர். அதை வலம் வருவது, சொறிவது, புல், தவிடு, ஜலம்,

புண்ணுக்கு அளிப்பது புண்ணியம். ஸந்தானம் உண்டாக்கும். அதைக் காலால் உதைப்பது, தடியால் அடிப்பது, அதற்கு உணவு அளிக்காமல் நாம் உண்பது. பிறர் நிலத்தில் மேயும்போது ஸொந்தக்காரரிடம் சொல்வது முதலியவை பாபமாகும். அதனுல் சண்டாளப் பிறவி உண்டாகும். கைசிகன் என்ற சண்டாளன் முன் பிறவியில் உயர்ந்த ஸன்யாஸி. பசுவின் கால் தூளிபட்டதென பிக்ஷான்னத்தை உண்ணுமல் தூரே எரிந்தார். அந்த பாபத்தால் அவர் சண்டாளரானுர். கோபூஜையினுல் திலீப மஹாராஜனுக்கு ரகு எனும் ஸத்புத்ரன் ஜனித்தான். முடிந்தவரை கோ ரக்ஷணம் செய்யவேண்டும். ஹிம்ஸிக்காமலாவது இருக்கவேண்டும்.

9. பிறர் தரித்த வஸ்த்ரம், பாதரக்ஷை, மாலை, தீர்த்தபாத்ரம், ஆஸனம், படுக்கை முதலியவைகளை உபயோகிக்கலாகாது. அவை பாபத்துடன் நோயையும் உண்டுபண்ணும்.

10. பிணப்புகை, இளம் வெய்யில், தீபநிழல், மனிதர் நிழல், சண்டாளர் நிழல் நம்மேல் படக்கூடாது. அவை நம் செல்வத்தையும் ஆரோக்யத்தையும் ஆயுளையும் குறைக்கும்.

11. நகம், மயிர் இவை நம் உடலிலிருந்து வளர்ந்து உயிரற்ற சிறகுபோலாகும். ஆதலால் நாள் பார்த்து மாஸத்திற்கு ஒருமுறை க்ருஹஸ்தன் வபனம் செய்து கொள்ள வேண்டும். நாமே செய்து கொள்ளக் கூடாது. நக்ஷத்திரம், திதி, வாரம் பார்ப்பது நம் முன்னேர் வழக்கம். திதியை கவனிக்கவேண்டியது மிக அவசியம். சதுர்த்தியில் வபனம் செய்து கொண்டால் மாதாவுக்கு நாசம். சதுர்த்தசி ஸகோதரிக்கு நாசம். ஷஷ்டி சகோதரருக்கு

ஆகாது, அமாவாஸ்யை, பௌர்ணமி, ஏகாதசி, த்வாதசி பிதாவுக்கு நாசம். ப்ரதமை தனத்தை அழிக்கும். நவமி தான்யத்தை அழிக்கும். அஷ்டமி குடும்பத்தையே அழிக்கும். திங்களும், புதனும் வபனத்திற்குச் சிறந்த நாள். சனி, வெள்ளி, செவ்வாய் கூடவே கூடாது. சாவு தீட்டில் பங்காளிகளுக்கு க்ஷவரமும், தர்ப்பணமும், அவசியம். க்ஷவரம் செய்துக்கொள்ளவேண்டிய 10-வது நாள் வெள்ளிக்கிழமை வந்தால், 9-வது நாளே வியாழனன்றே செய்துகொள்ள வேண்டும். தீட்டிலும் சிராத்தத்திற்கு முன்புமாவது ஸர்வாங்க க்ஷவரம் செய்துகொள்ளவேண்டியது மிக முக்கியம்.

12. நகத்தை நாம் கிள்ளக் கூடாது. கிள்ளினுல் உடனே ஸ்நானம் செய்யவேண்டும். நகத்தால் பூமியைக் கீறக்கூடாது. கிள்ளிய நகத்தை வீட்டிற்கு வெளியே போடவேண்டும். நகத்தைப் பல்லினுல் கடிக்கலாகாது. அப்படி கடிப்பவரே தனக்கு ஸ்திரமாக வஸிக்கும் இடம் என மூதேவி கூறுகிருள்.

13. துரும்பு. தர்ப்பம், புஷ்பம் இவைகளை நகத்தால் கிள்ளக்கூடாது. குடிக்கும் தீர்த்தத்தில் நகம் படக்கூடாது. வென்னீர் சூடாயிருக்கிறதா என்று பார்க்க விரலைவிடுவது தப்பு. தீர்த்தத்தை கையில் விட்டுப் பார்க்கவேண்டும். நகத்தால் பிறர்மீது ஜலந்தெளித்தால் நகச்சுத்தி வரும். நிவேதனம் செய்யும் வாழைப்பழத்தை நகத்தால் கிள்ளக்கூடாது. நுணியில் விரலால் கிள்ள வேண்டும். ஸ்வாமிக்கு அறைக்கும் சந்தனத்தை நகத்தால் வழிக்கக்கூடாது. விரலின் உட்புறத்தால் வழிக்க வேண்டும்.

14. மண்ணுங்கட்டி, ஓடு, கறி இவைகளைக் காரணமின்றி பொடிசெய்யலாகாது.

15. ஸ்வாமிக்கு ஸமர்ப்பிக்காத புஷ்பத்தை தரிக்க லாகாது. மயிருக்கு வெளியில் தெரியும்படி புஷ்பம் அணியக்கூடாது. தலைவாரி (பின்னுதவர்) மயிருடன் புஷ்ப மாலையை சேர்த்துக் கட்டிக்கொண்டால் வாஸனை சிறிது கூட வெளியில் போகாது. மணமில்லாத காகிதப்பூ, டிஸம்பர் புஷ்பங்களை ஸ்திரீகள் தரிக்கக் கூடாது. பழய புஷ்பங்களைக்கூட காலால் மிதிக்கக் கூடாது.

16. ஒற்றைமாட்டு வண்டியில் ஏறக்கூடாது, தீர்த்த யாத்திரை, க்ஷேத்திர யாத்திரை போகும்போது ஒற்றை மாட்டு வண்டியில் போனால் ஏற்கனவே செய்த புண்யத் தையும் அது போக்கிவிடும். ஒற்றைக்காளை சிவனது வாஹனம். வ்ருஷபமாக ரூபமெடுத்து தர்மதேவதை சிவனைச் சுமக்கின்றது. நாம் ஒற்றைக் காளைமீது ஏறி னாலும் அல்லது ஒற்றைமாட்டு வண்டியில் ஏறினாலும் தர்மத்தின்மீது ஏறுவதாகும். சிவ வாஹனத்தில் ஏறி, சிவாபசாரம் செய்ததுமாகும்,

17. நமதுஊர் அல்லது வீட்டிற்குப் பின்புற வழி யாகப் போகக்கூடாது, வாசற்படி வழியாகவே செல்ல வேண்டும். தக்ஷனது யாகசாலைக்குத் தாக்ஷாயணீ தேவி பின்புறமாகவே சென்று, யாகத்தையும் அழித்துத் தன் உடலையும் விட்டு, மற்றோர் அப்படிப் போகக் கூடா தெனக் காண்பித்தாள்.

18. ராத்திரி காலத்தில் மரத்தின் நிழலில் எவரும் தங்கக்கூடாது. கர்பிணிகள் தங்கினால் உடனே கர்பத் திற்குத் துன்பமுண்டாகும். இரவு வேளையில் பக்ஷிகள் மரத்தின்மீது வந்து தங்கும். மரத்தின் கீழ் உள்ளவர் மீது எச்சமிடும். மரத்தில் பேய் பிசாசுகள் அண்டவரும்.

அவைகளால் நமக்குத் தீங்கு உண்டாகும். மரங்கள் இரவில் கரிமல வாயுவை வெளியாக்குவதால், அதன் அடியில் வசிப்பவருக்கு நோய் உண்டாகும், நோயே பேய் எனப்படும். கலியில் 5 ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின் நோயெல்லாம் பேயாகும் என புராணம் கூறுகிறது.

19, சூதாடலாகாது. காசுவைத்து சீட்டாட்டம் ஆடுவதும் சூதாடுவதாகும். ஸகல தர்மங்களையும் தெரிந்து அனுஷ்டித்து வந்த தர்மராஜனே "க்ஷத்ரியனை சண்டைக்கும் சூதாடவும் அழைத்தால் வரமாட்டேன் எனதிரும்பக் கூடாது" என்ற சாஸ்திரத்தைத் தழுவி, சூதாடி, பட்ட கஷ்டத்தைப் பாரதம் கூறுகிறது. பொய், பேராசை த்ரோஹம் முதலிய பல பாபம் தோன்றுவதால் அது மஹா பாபமானது. அரசாங்க சிக்ஷை கிடைப்பதும் ப்ரத்யக்ஷம்.

20. நதியைக் கை, கால்களால் நீந்தித் தாண்டுவது பாபம். பாபம் என்று கூறிய தர்மசாஸ்த்ரம் நம் உடலைக் காக்கக் கண்ணும் கருத்துமாக இருக்கிறது. நீந்திப் போகும்போது வெள்ளம் பெருகினலும், கை, கால் ஓய்ந்தாலும், மரணம் நேருவது எளிது. தோணியால் அல்லது ஆழமில்லாத நதியைக் காலால் கடந்தபின், கரையேறி உடனே ஆசமனம் செய்யவேண்டும், புண்ய நதியைக் கடந்த பாபம் நிவர்த்தியாகவும், அபசாரத்தை அகற்றி உபசாரம் செய்யவும் இது கூறப்பட்டதுபோலும்.

21. கேளாதிருக்கும்போது வலுவில் எவருக்கும் தர்மத்தையும், வ்ரதத்தையும் கூறலாகாது. அதிலும், பிறவியினலும் குணத்தினலும் தாழ்ந்தவனுக்கு நிச்சயமாகக் கூறக்கூடாது. பசி எடுத்தவனுக்கே உணவளிக்க வேண்டும். அக்கரையுடன் கேட்காதவரிடமும், குணமில்

லாதவரிடமும் தர்மத்தைக் கூறினல், அவருக்கு அதில் நம்பிக்கை வராது. அபாத்ரத்தில் வர்ஷித்த பாபம் உபதேசித்தவருக்கு வரும். ஆனல் அவர்கள் முன்னேற, நல்ல தர்மங்களைக் கேட்கும்படியான ஆசையை உண்டு பண்ணி, கேட்ட பின்னர் உபதேசிப்பதே உசிதம்.

22. தேவ விக்ரஹம், குரு, தந்தை, தாய், பெரியோர், பசு இவர்களின் நிழலைக் காலால் மிதிக்கக் டாது. நீசர் நிழலையும் மிதிக்கக்கூடாது. தாண்டவும் கூடாது. அவர்களது சக்தி நிழலிலும் சிறிது ப்ரதிபலிக்கின்றது அதை மிதித்தால், அவர்களுக்கே அபசாரம் செய்தது போலாகும். சிவன் வஸிக்கும் கைலாஸ மலையைத் தாண்ட முயற்சித்தான் ராவணன். அதைத் தாண்ட முடியாததுடன், கைலாஸத்தின் அடியில் அகப்பட்டுக் கொண்டு தவிக்க நேர்ந்தது.

23. ஸத்யத்தையே சொல்லவேண்டும். அந்த ஸத்யமும் பிறருக்குத் துன்பத்தையும் அப்ரியத்தையும் உண்டுபண்ணுமானல் அத்தகைய ஸத்யத்தைக் கூறலாகாது. ஒருவனுக்கு ப்ரியமானது என்று பொய்யைக் கூறக்கூடாது. மெய்யெல்லாம் மெய்யல்ல! ஒரு வேடன் பன்றியைத் துறத்தி வந்தான். வழியில் ஒரு ஸத்யவாதி இருந்தார். "இந்தப் பக்கம் பன்றி சென்றதா?" என வேடன் அவரைக் கேட்டான். சென்ற உண்மையைக் கூறினல் வேடன் அதைக் கொல்வான். அந்த பாபத்தில் பாதி ஸத்யவாதிக்கு உண்டாகும். இல்லை எனில் அது பொய்யாகும். ஆதலால் அவர் "கண்டவர் சொல்வரா? சொல்பவர் கண்டவரா?" என ஸத்யமான பரம்பொருளைப்பற்றிக் கூறினர். ஆதலால் வேடனும் ஜீவ ஹிம்ஸையை விட்டொழித்தான்.

24. ஒருவனைப் 'பாபி' என்று கூறலாகாது. உண்மையாக அவன் பாபம் செய்யாமலிருந்தால், அந்த பாபத்தைச் செய்த தோஷம் சொன்னவரை வந்தடையும். அவன் பாபம் செய்திருந்தாலோ, அவன் பாபத்தைக் கூறியதால், நமக்கு அதில் பாதி பாபம் வரும். கருடன் பாம்பைக் கொல்லும்போது ஏகதர் என்பவர் இது பாபம் என்றார். அவர் ஏறிச்சென்ற தெய்வ விமானம் பூமியில் விழுந்தது. இதைக் கண்ட தம்பி த்விதன் நன்றாகக் கொல் என்றார். அவர் விமானமும் அவனியில் வீழ்ந்தது. த்ரிதன் என்ற இளையவன் மௌனமாகச் சென்றான். அவன் விமானம் விழாமல் சென்றது.

25. தெய்வம், கர்மபலன், பரலோகம், மறு பிறப்பு, ஸ்வர்கம், நரகம் இவை உண்டோ இல்லையோ என ஸந்தேகிக்கக் கூடாது. வேதம் என்ற தேவவாக்கு அவைகள் உண்டு எனக் கூறுகிறது. நம்மைவிட சிறந்த அறிவும் பரந்த நோக்கமுமுள்ள மஹரிஷிகள் அதை ஆமோதிக்கின்றனர். தாங்களும் வேதம் கூறிய கர்மாக்களைச் செய்து பலனை அனுபவித்துப் பார்த்து, நாமும் அதை அனுஷ்டித்து நன்மையடையும் பொருட்டு உபதேசித்தனர். எவர் பொய் கூறுவது பாபம் என்கிறார்களோ அவர்களே பொய்யாக இவைகளை எழுதிவைப்பார்களா? அப்படி எழுதுவதால் அவர்களுக்கு என்ன பயன்? ப்ருகு எனும் முனிவர் ஸோமகாந்தன் எனும் வேந்தனின் பூர்வ ஜன்ம சரிதத்தைச் சொல்லும்போது அவன் இவர் சொல்வது நிஜமோ என ஐயங்கொண்டான். உடனே ஆயிரம் வலியன் குருவிகள் குஷ்டரோகமுள்ள அவன் உடலைக் குத்த ஆரம்பித்தன. தன் தவறை உணர்ந்து முனிவரிடம் மன்னிப்புக் கேட்டான். இங்ஙனம் நம்பாதபோது ஒவ்வொருவருக்கும் துன்பம் வரவேண்டுமென எதிர்பார்ப்பது அறியாமை. வைத்யர், மருந்து நன்மை

தருமோ தராதோ என ஸந்தேஹித்து மருந்து உண்ணு மல் இருக்கிருேமா ? கண்ணுல் பாராததை நம்புவதில்லே என வாதம் கண்மூடித்தனமானது. நமது உயிரையோ, புத்தியையோ நாம் கண்ணுல் பார்க்கவில்லே. ஆதலின் நாம் உயிரில்லாதவன் புத்தியில்லாதவன் என ஒப்பு வோமா? கடோபநிஷத்தில், இறந்தபின் ஜீவன் உண்டா இல்லேயா? பரலோகம் உண்டா இல்லேயா? மறுபிறவி உண்டா இல்லேயா? என நசிகேதன் யமனேயே கேட் கிருர். "நான்தான் ஜீவனேக் கொண்டு செல்பவன். என் உலகில்தான் விசாரணே, சிக்ஷை, புண்ய பாபத்திற் கேற்றபடி மறு பிறவி உண்டு" என்கிருர் யமன். நம்பு! நம்பு!! நம்பு !!!

26. தலேமயிர், மீசை, நகம் இவைகளே க்ருஹஸ் தன் ஒரு மாதத்திற்கு மேல் வளர்க்கக் கூடாது, மனேவி கர்ப்பிணியானுலும், தாய் தந்தை இறந்து ஒரு வருஷம் ஆகும்வரையும் வபநம் கூடாது. ச்ராத்தத்திற்கு முன் ஒரு பக்ஷமேனும் வபநம் செய்துகொள்ளாமல் இருக்க வேண் டும். காரணமின்றி இவைகளே வளர்க்கவும் கூடாது.

27. யாசகன் வருவானே என அஞ்சி, தெருக் கதவை காலே மாலேகளில் சாத்தக்கூடாது.

28. தேவ நிந்தை, வேத நிந்தை, பெரியோர் நிந்தை கூடாது. அது மிக பாபகரமானது. சிவ நிந்தை செய்த ப்ரும்மாவின் சிரத்தை வீரபத்ரர் கிள்ளி எறிந்தார். ஹிம வானும் மேனேயும் சிவனேச்சிறந்த தெய்வமென எண்ணி கன்யகாதானம் செய்தால் அவர் முக்தி பெறுவர். தங்களுக்கு ஹிமயத்தால் கிடைக்கும் நன்மை. கிட்டாது எனத்தேவர்கள் ; அவர்களுக்கு சிவனிடம் சிறிது மதிப்புக் குறையும்படி; அவர் ச்மசானவாஸி, விரூபர் என்பது

போன்ற சிவ நிந்தை செய்யும்படி விஷ்ணுவைத் தூண்டி னர். அவர் சிவ நிந்தை எப்படியும் பாபமென அதை மறுத்து, சிவனையே சிவநிந்தை செய்யும்படி வேண்டினர். அவரும் அப்படியே கிழவர் வடிவமெடுத்து, அவர்களிடம் சிவ நிந்தை செய்தார், என புராணம் கூறுகிறது. வேத வேத்யனுன தேவனும் வேதமும் ஒன்றே. அவரை அர்ச்சிப்பவர்களை நிந்தித்தாலும் நரகம் உண்டாகும்.

29. தீபத்தை வாயினல் ஊதக்கூடாது. புருஷன் ஒருபோதும் அணைக்கவேகூடாது.

30, ஜலத்திலும் எண்ணெயிலும் நம் நிழலை பார்க் கக்கூடாது.

31. பற்களைச்சத்தம் கேட்கும்படி நெறிக்கக்கூடாது. பற்களை நெறிப்பது கோபக்குறியாம். ராக்ஷஸ ஸ்வபா வமுமாகும். பேய் பிடித்தவன் செயலுமாகும்.

32. கொட்டாவி விடும்போது வாயின் எதிரே கை யை வைத்துக்கொள்ளவேண்டும். கொட்டாவி சோம்ப லுக்கும், நோய்க்கும், தூக்கத்திற்கும் தூதன்போன்றது. உள் இருக்கும் கெட்ட காற்று, மதகுவழியாக ஜலம் வெளி வருவதுபோல் வெளியே வருகின்றது. அது பிறர் மேல் பட்டால் நோய் உண்டாகும். ஒருவர் கொட்டாவி விடும் போது பார்த்தால் பார்ப்பவரையும் அது தொத்து நோய் போல் பிடித்துக்கொள்கிறது. கையால் மறைப்பதாலும், விரல்களால் சிட்டிக்கை போடுவதாலும் அவ்விஷக்காற்று நேராக பிறர் மேல் பரவாமல் காற்றுடன் கலந்துவிடும். சிவ, சிவ, கிருஷ்ண, கிருஷ்ண என்று அச்சமயம் கூற வேண்டும். அதனுல், இழந்த பலத்தையும் ஆயுளையும் பெறுகிறேம். (கிருஸ்தவரும் அங்ஙனம் செய்து ஏசு பெயரைக் கூறுகின்றனர்.)

33. விளக்கு நிழல், மனிதர் நிழல், வஸ்த்ர ஜலம், தலைமயிரிலுள்ள ஜலம், ஆட்டின் புழுதி, கழுதையின் புழுதி, பெண்மக்கள் பாததூளி, முறத்தால் உண்டாகும் காற்று, பெருக்கும்போது மேலே விழும் புழுதி, ஆகிய இவைகள் நம்மேல் பட்டால், இந்த்ரனுக்கு ஸமமான தனமிருந்தாலும் அதை தொலைத்துவிடும். நமது பூர்வ புண்யத்தையும் கொண்டுபோய்விடும். ஆதலால் இவைகளை நன்கு கவனித்து நடக்கவேண்டும்.

34. புருஷர்கள், பெண்கள் பங்க்தியிலோ சிறுவர் பங்க்தியிலோ உட்கார்ந்து உண்ணக்கூடாது. அதிலும் தன் மனைவியுடன் உட்கார்ந்து பங்க்தியில் சாப்பிடக் கூடாது. ஆனல் விவாஹம், யாத்ரை இக்காலங்களில் பத்னியோடு ஸமமாக சாப்பிடுவது குற்றமல்ல.

35. சுத்தமான உணவை உட்கொண்டால்தான் மனம் சுத்தமாக இருக்கும். உணவு, அதைச்செய்பவர், உண்பவர், உடன் உட்காருபவர் அனைத்தும் சுத்தமாக இருத்தல் வேண்டும்.

36. பகலில் தூங்கக்கூடாது. ஸ்த்ரீ புருஷ ஸங்கமும்கூடாது. பகலில் பாலைப்பருகக்கூடாது. மத்யானத்திற்கு மேல் அச்வத்த மரத்தை ப்ரதக்ஷிணம் செய்யக் கூடாது.

37. வஸ்த்ரம் அணியாதவனையும், கச்சம் உடுத்தாதவனையும், கௌபீனம் மாத்ரம் தரித்திருப்பவனையும் மூதேவி வந்தடைகிருள். ஆதலால் அவச்யமான காலம் தவிர மற்றபோதெல்லாம் உரியவர் கச்சத்துடன் இருக்க வேண்டும். வடநாட்டில் சிறு குழந்தைகள் முதல் கச்சம் கட்டும். பவித்ரமான நமது தக்ஷிணதேசத்தில் விவாஹமான பலர் கச்சம் இல்லாமல் இருப்பதும் அப்படியே

ஸந்த்யா வந்தனுதிகளைக் செய்வதும் பழக்கமாயிருக்கி றது. இது துராசாரம் என ஸ்ம்ருதி கண்டிக்கின்றது. "கச்சமே இல்லாதவர், வால் விட்டுக்கச்சம் கட்டுபவர், விகச்சர், மேல்நோக்கி கச்சமணிபவர் அறணுளில் கச்சம் அணிபவர் ஆகிய இந்த ஐவரும் வஸ்த்ரமில்லாதவர் போலாவார். அவர்களைக் கர்மகாலத்தில் காணக்கூடாது. கண்டால், அணிந்த ஆடையுடன் ஸ்னனம் செய்யவேண் டும்." பஞ்சகச்சம் அணிவது பார்வைக்கு அழகு. தர்மத் திற்கு ஏற்றது. வஸ்த்ரத்தின் நுணி தசை எனப்படும். அது தொங்கினுல், அதன் வழியாக ஆத்மசக்தி பூமியில் இறங்கிவிடும். ஆதலால் நுணிதெரியாமல் கச்சம் அணிய வேண்டும். (துலுக்கரும் லுங்கியை நுணி இல்லாமல் தரிக்கின்றனர்.)

38. நுணியில் பட்டினுல் கரை அமைத்து வேஷ்டி யணிவது முன்னேர் வழக்கம். அந்த பட்டு ஆத்மசக்தி சிந்தாவண்ணம் ரக்ஷிக்கின்றது. எலக்ட்ரிக் கம்பியில் பட்டையே மேலே மூடுகின்றனர். நமது இஹபர நன்மை யை நாடிச்சொல்லும் சாஸ்த்ரத்தை மதிக்கவேண்டாமா? நமது முன்னேர் கைப்பற்றிய வழியைப்பின் பற்றவேண் டாமா? கச்சமில்லாமல் செய்யும் கர்மா பயனைத்தராது. ஆதலால் ஸந்த்யாவந்தனம் முதலிய கர்ம காலத்திலே னும் கட்டாயம் உரியவர் கச்சமணிதல் வேண்டும்.

39. இரவில் வேஷ்டி துவைக்கக்கூடாது. குப்பை யைப்பெருக்கி வெளியில் கொட்டக்கூடாது. மரத்தின் நிழலில்தங்கக்கூடாது. பூமியைக்கீறுதல், வெட்டுதல், உழு தல் கூடாது. ரஹஸ்யமான விஷயத்தைப் பேசக்கூடாது.

40. பசுக்களுக்கு நடுவிலும், ப்ராம்மணர்களுக்கு நடுவிலும், அக்னி ப்ராம்மணர் இவர்களுக்கு இடையிலும், தம்பதிகளுக்கு இடையிலும், குரு சிஷ்யர்களுக்கு நடுவி லும், அண்ணன் தம்பி, அக்காள் தங்கை, குழந்தை தாய்,

பசு கன்று இவைகளுக்கு இடையிலும் போகக்கூடாது. நந்தி சிவன், சிவன் பார்வதி, பெருமாள் கருடன், பெருமாள் பிராட்டி இவர்களுக்கு இடையே சென்றால் முன்னர் நாம் செய்த புண்யம் அனைத்தும் அகன்றுவிடும். இவர்களைப் ப்ரதக்ஷிணமாகச் சென்றால் புண்யமுண்டாகும்.

41. நாம் நடக்கும்போது கால் இடறினால் அங்குள்ள புழுதியில் சிறிது எடுத்து நெற்றியில் இட்டுக்கொள்ளவேண்டும். அந்த ம்ருத்திகை எனும் ரக்ஷை துர்தேவதைகளால் துன்பம் வராமல் நம்மை ரக்ஷிக்கின்றது.

42. தந்தை அல்லது தமயன் இருப்பவர் வெள்ளியினால் ஆள்காட்டி விரலில் அணியும் தர்ஜனீ என்ற மோதிரம் தரிக்கக்கூடாது. மற்றவர் தரிக்கவேண்டும். அந்த விரல் அசுத்தமானது. சிவன் அதனால் ப்ரும்மாவின் தலையைக் கிள்ளி எறிந்தார். பூஜை தர்ப்பணம் முதலிய கர்மாக்ககளில் அவ்விரலை உபயோகிக்ககூடாது. வெள்ளி ருத்ரனது கண்ணீரால் உண்டானது. நம்மை அறியாமல் ஆள்காட்டி விரல் மற்றவைகளுடன் சேரக்கூடும். அதில் தர்ஜனீ அணிவதால் அந்த தோஷம் நீங்கும்.

43. ஸாயம் ஸந்த்யா அனுஷ்டானத்தில் இருபக்ஷங்களிலும் வருகின்ற சதுர்த்தி, அஷ்டமி, சதுர்தசி இந்த தினங்களில் 54 காயத்ரீ செய்யவேண்டும். ஸப்தமியில் 37. அமாவாஸ்யை, பூர்ணிமா, ப்ரதமை ஆகிய நாட்களில் 36. த்ரயோதசி, விஷு இவைகளில் 28 காயத்ரீ செய்யவேண்டும்.

44. என்றைக்கும் காலையில் 108 முறை, நின்றுகொண்டு, முகத்திற்கு நேராக கைகளை மூடிக்கொண்டு

காயத்ரீ ஜபம் செய்யவேண்டும். தீட்டு வந்தபோது 10 காயத்ரீ செய்யவேண்டும்.

45. பூணல் அறுந்து போகாமல் இருந்தால்கூட, நான்கு மாதத்திற்கு ஒரு முறை புது பூணல் தரிக்க வேண்டும். இழை அறுந்தாலும், தீட்டு வந்து நீங்கிய போதும், ச்ராவணத்திலும் புதுப் பூணல் போட்டுக் கொள்ளவேண்டும். பதிதன். நீசன், அம்பட்டன், பஹிஷ்டை முதலியவர் பூணல்மேல் பட்டால் புதிதாகப் பூணல் தரிக்கவேண்டும்.

46. அஷ்டமி, சதுர்தசி, அமாவாஸ்யை, பௌர்ணமி, ஸங்க்ரமணம், மன்வாதி, யுகாதி, ஞாயிற்றுக் கிழமை, தாய் தந்தை ச்ராத்தத்திற்கு முதல்நாள் ச்ராத்த மறுநாள் தீட்டு போவதற்கு முதல் நாள் ஆகிய தினங்களில் இரவில் சாப்பிடக் கூடாது.

47. 8 வயதுக்கு மேற்படடவரும், 80 வயதுக்கு உட்பட்டவரும் ஏகாதசியன்று இரண்டு வேளையும் சாப்பிடக்கூடாது. பலஹீனமானவர், நோயாளி ஆகியவர் ஒரே வேளை பழம், பால் ஏற்றுக்கொள்ளலாம். அங்ஙனமும் உபவாஸம் இருக்க முடியாத அசக்தர் அரிசியை ஹவிஸ்ஸாக வைத்து (கஞ்சி வடிக்காமல்) உப்பு, புளி, காரம் சேர்க்காமல் ஒரே வேளை உண்டு உபவாஸம் இருக்கலாம். இதுவே ''ஒரு பொழுது'' எனப்படுகிறது. ஏகாதசியில் அன்னத்தைப் புஜிப்பவனுக்கு ப்ராய்ச்சித்தமே கிடையாது. அது மஹா பாபமாம். ஏகாதசிக்கு ஸமமான வேறு வ்ரதம் கிடையாது. சைவர், வைணவர், ஆண், பெண் அனைவரும் அனுஷ்டிக்கவேண்டும். தீட்டில் ஏகாதசி வந்தால்கூட உபவாஸம் இருக்க வேண்டுமேயல்லாது, அன்னத்தை புஜிக்கலாகாது. ஏகாதசி வ்ருதம்

இஹபரஸுகம் அளிக்க வல்லது. (25 ஏகாதசிகளின் மஹிமையை விளக்கும் அரிய புஸ்தகம் நாற்பத்துரண்டு பை ஸ்டாம்பு அனுப்பி 1-காபி பெறலாம்.)

48. நடுநிசியில் ஜலமல விஸர்ஜனம் செய்வோர் கைகால் அலம்பவேண்டியது அவச்யம். ஆசமனம்செய்ய வேண்டியதில்லை.

49. க்ரஹணம் தவிர மற்ற நாட்களில் நடு இரவில் ஸ்னானம் செய்யக்கூடாது. அவசரமும் அவச்யமும் நேர்ந்தால் தீபத்தை நீரில் காட்டி, ஸ்னானம் செய்ய வேண்டும்.

50. நண்பர், பந்து முதலியவர்களை, ஊருக்கனுப்பிவிட்டுவந்து உடனே ஸ்னானம் செய்யக்கூடாது. பூஜை செய்த பின்போ, சுபமான கல்யாணம், உபநயனம் முதலியன ஆனபின்போ உடனே ஸ்னானம் செய்யக் கூடாது.

51. ஞாயிற்றுக் கிழமையிலும், ஸப்தமியிலும் இரண்டு வேளையிலும் நெல்லிக்காய் சாப்பிடக்கூடாது. என்றைக்கும் இரவில் நெல்லிக்காய் சாப்பிடக்கூடாது. த்வாதசியில் ஞாயிற்றுக்கிழமை நேரிட்டால் விசேஷ விதியை அனுஸரித்து—த்வாதசிக்கு நெல்லிக்காய், ஆத்திக்கீரை, சுண்டைக்காய் சேர்த்துக்கொள்வது விசேஷமானதால்—சாப்பிடலாம்.

52. ஒரு நாளும் இரவில் நெல்லிக்காய். இஞ்சி, தயிர், நெல், வறுத்த மாவு இவைகளை சாப்பிடக் கூடாது,

53, மஞ்சள், நெய், உப்பு, புழுங்கலரிசி, மருந்து பாக்கு, வெல்லம் இவைகளுக்குப் பாக தோஷமில்லை.

அன்யர் வேகவைத்து கடையில் கொடுப்பதால் அது பாகம் செய்தது. ஏற்கத் தக்கதல்ல என்று எண்ண வேண்டாம். ஏற்கலாம். பசகதோஷமில்லே.

54. உபவாஸம் என்பது ஒன்றையும் உண்ணுமல் இருப்பதாம். அப்படி உபவாஸம் இருக்கும்போது உட லுக்கு அதிக கஷ்டம் ஏற்பட்டால் தீர்த்தம், கிழங்கு, நெய், பால், கஞ்சிவடிக்காத அன்னம், மருந்து, பழம் இவைகளில் ஒன்றை உட்கொண்டால் வ்ருத பங்கம் வராது. உபவாஸ காலத்தில் ஒருவர் செய்யும் ச்ராத் தத்திற்கு ப்ராம்மணர் அகப்படாமல் அது நின்று போவ தானுல், அங்கு ப்ராம்மணுர்த்தம் சாப்பிடலாம். அதனுலும் வ்ருத பங்கம் ஏற்படாது. உபவாஸ பலன் உண்டு.

55, உண்ணும்போது பரிஷேசன மந்த்ரங்களேச் சொல்லி, தனித்தனியாக பரிஷேசனம் செய்யவேண்டும். (ஒரே முறை கையில் ஜலத்தை எடுத்து 3 பரிஷேசனம் செய்து அதையே ஆபோசனமாக உட்கொண்டு அதில் கொஞ்சம் இடது கையால் தொட்டுக்கொள்வதற்காக பூமியில் விடுவதும் இக்காலத்தில் சிலர் செய்யும் அநா சாரம்) பூர்வா போசனத்தைப் பங்க்தியில் எல்லோரும் சேர்ந்தே உட்கொள்ளவேண்டும். அதில் மிகுதி யில்லா மல் உட்கொள்ள வேண்டும். பகலில் பூர்வாபோசன ஜலம் அன்னத்தின் மீது சிந்திஞல் அது அமிர்தபிந்து போலாம். இரவில் சிந்திஞல் அது ஸுரா (கள்) பிந்து வாகும். ஆதலால் இரவில் தீர்த்தம் போட்டவுடனேயே உட்கொள்ள வேண்டும். (அதை நினேவூட்ட இப்போதும் சிலர் ராத்திரிகாலம் எனக்கூறி உட்கொள்வர்.) உத்தரா போசனத்தில் பாதி ஜலத்தை உட்கொண்டு பாதி ஜலத்தை இலேயைச்சுற்றி வலது புறத்தில் பத்ரு தீர்த் தத்தால் விடவேண்டும்.

"ரௌரவே அபுண்ய நிலயே பத்மார்புத நிவாஸினும்
அர்த்தினும் உதகம் தத்தம் அக்ஷய்யம் உபதிஷ்டது."
என்ற ச்லோகத்தையும் கூறவேண்டும். அது மிக அவச்யம்.

56. சாப்பிட்டபின் 12 முறை வாய் கொப்பளிக்க வேண்டும். கை கால்களை அலம்பி ஆசமனம் செய்தால் தான் உடல் சுத்தம். இதற்குள் மற்றவர் மேல் (அவர் ஆசமனம் செய்வதற்குள்) பட்டால், உடனே இருவரும் ஸ்னுனம் செய்தால்தான் சுத்தி. மூத்ர விஸர்ஜனத்தில் 4 முறை, மலம் கழித்தபின் 8 முறை, பல் தேய்த்தபின் 16 முறையும் வாய்க் கொப்பளிக்க வேண்டும். இந்த கார்யங்கள் ஆன பின்பும் ஆசமனம் செய்யவேண்டும் ஆசமனம் செய்ய சுத்தமான ஜலம், பாத்ரம் கிடைக்காத போது, ப்ரணவத்தைக்கூறி, கையினுல் வலது காதை 3 முறை தொட்டால் போதும். இது ச்ரோத்ராசமனம் எனப்படும். ஜலமுள்ளபோது இப்படி செய்யக்கூடாது.

57. நதியில் புதிதாக ஜலப்ரவாஹம் வரும்போது 10 நாள் அதில் ஸ்னுனம் செய்யக்கூடாது. (மலமும்' குப்பையும் கலந்து) பூச்சிப் பொட்டுகளுடன் வருமல்லவா? புதுப்ரவாகம், ஆடி மாதம் பிறந்தவுடன் முதல் 3 நாள் ஸ்னுனம் செய்யக்கூடாதாம். அது நதி பஹிஷ்டைக் காலமாம். க்ரஹணம், உபாகர்மா, ஸங்க்ரமணம் இவை விசேஷமான காலமாதலால், அச்சமயம் முன் கூறியதற்கு மாருக நதி ஸ்னுனம் செய்யலாம். இதற்கு விசேஷ விதி எனப் பெயர்.

58. மாலை ஸந்த்யாவந்தனத்தைச் சிலர் மேற்கு முகமாகவே செய்கின்றனர். அர்க்யம் கொடுப்பதும் ஜபமும் மாத்திரந்தான் மேற்கு முகமாக செய்யலாம்

ஆசமனம், ப்ரோக்ஷணம், அக்நிச்ச ஆதித்யாதி தர்ப்பணம் முதலியவைகளைக் கிழக்கு அல்லது வடக்கு முகமாகத்தான் செய்யவேண்டும்.

(59) க்ரஹணம்

1. ஸூர்ய க்ரஹணம் பிடிப்பதற்கு 4 யாமத்திற்கு முன்பு சாப்பிடவேண்டும்.

2. சந்த்ர க்ரஹணம் பிடிப்பதற்கு 3 யாமத்திற்கு முன்பு சாப்பிடவேண்டும்.

3. க்ரஹணம் விடாமலிருக்கும்போதே, சந்த்ரன் அஸ்தமனமானால், அது க்ரஸ்தாஸ்தமனம் எனப்படும். அன்று பகலெல்லாம் உபவாஸமிருந்து மாலை சந்த்ரோதயத்தைப் பார்த்த பின்பே சாப்பிடவேண்டும்.

4. ஸூர்யனை க்ரஹணம் விடாதபோது ஸூர்ய அஸ்தமனம் ஆகிவிட்டால், இரவு ஒன்றும் உண்ணமலிருந்து மறுநாள் காலை, ஸ்னானம் செய்து ஸூர்யதர்சனம் செய்த பின்பே சாப்பிடவேண்டும்.

5. க்ரஹணம் பிடிக்கும்போது, ஸமுத்ரக் கரையிலுள்ளவர், ஸமுத்ர ஸ்னானம் செய்யலாம். க்ரஹணம் விட்ட ஸ்னானம் ஸமுத்திரத்தில் செய்யக்கூடாது. ஏன்? ப்ரதமையில்தான் க்ரஹணம் விடும். பர்வாவில்தான் (பௌர்ணமி, அமாவாஸ்யை, பர்வாக்கள் எனப்படும்) ஸமுத்ர ஸ்னானம் செய்யவேண்டும்.

6. பஹிஷ்டா ஸ்திரி கூட க்ரஹண ஸ்னானம் — பிறர் மொண்டுவிடும் ஜலத்தால் — செய்யவேண்டும்.

7. க்ரஹண காலத்தில் எல்லா தீர்த்தமும் கங்கைக்கு ஸமம். எல்லா பிராமணர்களும் வஸிஷ்டருக்கு ஸமம்.

8. க்ரஹணம் விடும் வரை ஜபம் செய்யவேண்டும். தூங்கக்கூடாது.

9. க்ரஹண காலத்தில் கர்ப்பிணிகள் வெளியில் வரக்கூடாது.

10. க்ரஹணத்திற்கு முன்பு பக்வம் செய்த அன்னம் முதலியவைகளிருந்தால் அவைகளை உபயோகிக்கக் கூடாது. தூரே எறிந்துவிடவேண்டும்,

11. தயிர், ஊர்காய், முதலியவைகளில் தர்ப்பத்தைத் துண்டித்துப் போடவேண்டும்.

12. க்ரஹணத்தில் செய்யும் ஜபமும், தானமும் அபிரிமிதமான பலனைத் தரும்.

13. ஸூர்ய க்ரஹணத்தில், பிடிக்க ஆரம்பித்தவுடன் தர்ப்பணம் செய்யவேண்டும். சந்த்ர க்ரஹணத்தில் விட ஆரம்பித்தவுடன் தர்ப்பணம் செய்யவேண்டும்.

14. ஸமுத்ர ஜலத்தில் பித்ரு தர்ப்பணம் செய்யவேண்டும். ஆசமனம் செய்யக்கூடாது. வீட்டில் ஸ்நானம் செய்து மடியாக எடுத்துச் சென்ற ஜலத்தால் ஆசமனம் செய்யவேண்டும்.

15. சந்த்ர ஸூர்யர்கள் ஓஷதிகளுக்கு அதிபதியானதால் அவர்களுக்கு க்ரஹண பீடை ஏற்பட்டபோது நமது வயிற்றில் அன்னம் இருக்கக்கூடாது. அன்னமிருந்தால் நோய் உண்டாகும்.

16. யாருடைய நக்ஷத்திரத்தில் அல்லது ஜன்ம அனுஜன்ம நக்ஷத்திரத்தில் க்ரஹணம் பிடிக்கிறதோ அவர்கள் கீழ்வரும் ச்லோகத்தை ஓலையில் எழுதி க்ரஹணம் விடும்வரை நெற்றியில் பட்டம் கட்டிக்கொண்டிருந்து க்ரஹணம் விட்டபின் ஓலையையும், ஒரு பூஷணிக்காயையும் தக்ஷிணையுடன் தானம் செய்யவேண்டும்.

17. சந்த்ர க்ர ஹண ச்லோகம் :—

இந்த்ரோ அநலோ யமோ ரிக்ஷோ வருணோ - வாயு ரேவச குபேர-ஈசோ-க்நந்து-இந்து-உபராக-உத்தவ்யதாம்-மம.

18. ஸூர்ய க்ர ஹண ச்லோகம் :—

இந்த்ரோ-அநலோ-யமோ-ரிக்ஷோ-வருணோ-வாயு ரேவச குபேர-ஈசோ-க்நந்து-அர்க்க-உபராகோத்த-வ்யதாம்-மம.

19. ச்லோக அர்த்தம் :— இந்த்ரன், அக்னி, யமன். நிருருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் ஆகியவர்கள் சந்த்ர ஸூர்ய க்ரஹணத்தால் உண்டான துக்கத்தை அகற்றட்டும்.

---

60. இளநீரை வெண்கலப் பாத்ரத்தில் ஏந்தி சாப்பிட்டால் அது கள் சாப்பிடுவது போலாம். வெள்ளி பாத்ரத்தை உபயோகிக்கவும்.

61. தாம்ப்ர பாத்ரத்தில் பால், சந்தனம், புஷ்பம் இவைகளை வைக்கக்கூடாது.

62. எள்ளுருண்டை, திலான்னம் இவைகளை பித்ருக்களுக்காகவும், தேவர்களுக்காகவும் தான் செய்ய வேண்டும். 'நமக்கு' என செய்து சாப்பிடலாகாது. சனிக்கிழமை எள்ளுருண்டை அல்லது சர்க்கரை வெல்லத்துடன் கலந்த எள்ளை அரசமரத்திற்கு நிவேதனம் செய்து விநியோகம் செய்தால் நோய் அகலும். சனிக்கிழமை திலான்னம் அளித்தால் பாபம் அகலும்.

63. ச்ரவண த்வாதசி ஏகாதசியைவிட மிக ச்லாக்யமானது, (ச்ரவண நக்ஷத்ரத்துடன் கூடிய த்வாதசி

ச்ரவண த்வாதசியாகும்). ஏகாதசி உபவாஸத்தைவிட ச்ரவணத்வாதசி உபவாஸம் மிக அதிக பலனை அளிக்க வல்லது.

64. முக்யமான மாத்யான்ஹிக காலம் ஸுமார் 12 மணிக்கே. கௌணகாலம் 8½ முதலாகும். த்வாதசி யன்று முக்ய மாத்யான்ஹிககாலம் வருவதற்குள் மாத் யான்ஹிகம், வைச்வதேவம் முதலியன செய்யலாம். த்வாதசி பாரணை விசேஷமானதால் அப்படி விதிக்கப் பட்டது. இதைக்கொண்டு த்வாதசி ச்ராத்தத்தையும் காலையிலேயே செய்வது தகாது. அதற்கேற்ற முக்ய காலத்தில்தான் செய்யவேண்டும்.

65. த்வாதசி மிக ஸ்வல்பமாக இருந்தால், அதி காலையிலேயே எல்லாவற்றையும் செய்து, த்வாதசியில் பாரணை செய்யவேண்டும். அதிலும் ஸ்வல்பமாக த்வா தசி இருந்தால், அதில் துளஸி தீர்த்தம் அருந்தினுல் பாரணை செய்த பலனுண்டாகும். அம்பரீஷ மஹாராஜன் அங்ஙனமே செய்தார்.

66. எந்த தீட்டு வந்தாலுங்கூட ஏகாதசி வ்ருதம் இருத்தல் வேண்டும். ஸந்த்யாவந்தனம் போல் அது முக்யமானதால், தீட்டில் மற்றதைப்போல் இதை விடக் கூடாது. ஆனுல், பூஜை, தானம் இவைகளைத் தான் நேராகச் செய்யக்கூடாது. தீட்டில்லாதவரைக்கொண்டு செய்விக்கலாம்.

67. உபவாஸம் என்பது சரீர சுத்திக்காகவும் மநச் சுத்திக்காகவும் தேவப்ரஸாதம் பெறுவதற்காகவும் ஏற்பட்ட கர்மா. நினைத்தபடி சாஸ்த்ர மில்லாமல் உப வாஸமிருக்கக்கூடாது. உபவாஸம் இரு என்று சாஸ்த் ரம் விதித்த காலத்தில் உண்ணக்கூடாது.

68. மனது ஒருமைப்படுவதற்கு உபவாஸம் ஓர் உயர்ந்த ஸாதநம். உடலே தர்மத்திற்கு முதல் ஸாதன மானதால் நோய்வாய்ப்படும்படி கடினமான உபவாஸத் தைக் கைக் கொள்ளலாகாது. கலியில் அன்னத்தை ஆச்ரயித்தே ஜீவனிருப்பதால் அடிக்கடி அநாவச்யமான உபவாஸத்தால் உடலைக் கெடுத்துக்கொள்ளக் கூடாது. ஓயாமல் சாப்பிடவும் கூடாது.

69. அத்யாசனம், அதீபானம்: அதாவது கிடைத்த போதெல்லாம் உண்பது, அளவுகடந்து உண்பது. குடிப் பது இவை பாபமாம். பாண்டவர் மஹாப்ரஸ்தானம் செல்லும்போது ஒவ்வொருவராகக் கீழே விழுந்தனர். அதற்கென்ன காரணம் என்று கேட்டுவந்தான் பீமன், தானும் விழக்கூடும் என உணர்ந்து விழுதற்கு முந்தியே கேட்டுக்கொள்வோமென "அண்ணா நான் எதனுல் விழு வேன்?" என்று கேட்டான். "அத்யாசனம் அதீபானம் இவைகளால் விழுவாய்" என்றார் தருமர்.

70. பூர்ண உபவாஸம் இருக்கமுடியாதவர் பழம், பால் அருந்தி உபவாஸமிருக்கலாம். இதே பலஹாரம் எனப்படும். உப்புமா, அடை, தோசை முதலிய கடின மான உணவை உட்கொள்வது உபவாஸமாகாது. எனி னும் கருணைகூர்ந்து பெரியோர் ஒருவேளை பலஹாரம் செய்தால்கூட உபவாஸ பலனுண்டென்றார்கள். "எல்லா ஏகாதசியும் உபவாஸம் இருக்கமுடியாது. வருஷத்தில் ஒரு ஏகாதசி சுத்த உபவாஸம் இருக்கிறேன், மற்ற ஏகாதசி உபவாஸ பலன் வேண்டும்" என்று பீமன் வ்யாஸரை வேண்டினுன். அப்படியே ஆகட்டும் என்றார். அதே பீமைகாதசி. அன்றேனும் சுத்த உபவாஸ மிரு.

71. த்வாதசி பாரணைக்குப் பிறகு பகவதர்ப்பணம் செய்த ஒரு துளஸீதளத்தைச் சாப்பிட்டால் ஸகல

தோஷங்களையும் அகற்றும். நித்யமே உண்டபின் இது அவச்யமாம், அன்னதோஷம் நம் மனதைக் கெடுக்காமலும், பாபத்தை உண்டுபண்ணுமலும் காப்பது துளஸீ தளம்.

72. உபவாஸத்தில் நீக்கத்தக்கவை :— அடிக்கடி ஜலமருந்தக்கூடாது. பித்த நீர் வாயில் எடுக்கும்படி உபவாஸ தினத்தில் பல் துலக்கக் கூடாது. தாம்பூலந் தரித்தல், பகலில் உறங்குதல் கூடாது. நடத்தல், சண்டையிடுதல், உறக்கப் பேசுதல், வீண் வம்பு பேசுதல் உயவாஸ பலனைக் கெடுக்கும், ச்ருங்காரமான பேச்சு, ஸ்த்ரீ ஸங்கம் கூடாது.

73. நித்யோபவாஸமெது ? பகல் இரவு இரண்டே வேளை புஜித்து இடையில் ஒன்றையும் புஜிக்காமலிருத்தலும், அந்த உணவிலும் ஒவ்வொரு கபளத்தையும் கோவிந்தா கோவிந்தா என்று கூறிப் புஜிப்பதும் நித்யோபவாஸமாம்.

74. த்வாதசியில் விசேஷம் : நெல்லிக்காய், சுண்டைக்காய், ஆத்திக்கீரை இம்மூன்றும் த்வாதசி பாரணையில் சேர்த்துக்கொள்ளவேண்டிய விசேஷ பொருள்கள். எல்லாம் சேருதல் விசேஷம். இதில் ஒன்ருவது சேர்க்க வேண்டியது மிக அவச்யம்.

75. த்வாதசியில் விலக்கத்தக்கவை ; புடலங்காய், கத்தரிக்காய், உள்ளி, தேன், வெங்காயம், பரான்னம், பகலில் தூக்கம். இருவேளை புசித்தல், எண்ணெ, ஸ்த்ரீ போகம் இவை கூடாது. ஏகாதசி புண்யத்வத இவை அகற்றி விடும். ப்ராமணர் என்றுமே உள்ளி, வெங்காயம் சாப்பிடக் கூடாது.

76. காலை பாரணை ஏன் ? த்வாதசி எத்தனை நாழி இருக்கின்றதோ அதில் எட்டில் ஒரு பாகத்திற்கு ஹரி

வாஸரம் என்று பெயர். அச்சமயம் பூஜை வைச்வேதங்களை முடித்து உண்பது பகவானுக்கே அன்னமிடுவதாகும், அம்பரீஷ மஹாராஜன் இதன் உண்மையை உணர்ந்தே பாரணைக்குப் பதிலாக தீர்த்தம் அருந்தினன். ஏகாதசியில் உபவாஸமில்லாதவர்க்கு த்வாதசி பாரணை பயனைத்தராது.

77. உள்ளி, வெங்காயம் ஏன் கூடாது? சாஸ்த்ர ரீதியாக இவை, ஸம்ஸ்காரத்தால் உண்டாகும் ப்ராஹ்மண்யத்தை அகற்றுவதால். இதை அறியாமல் உண்டவர் புனர் உபநயனம் என்ற ப்ராயச்சித்தம் செய்துகொண்டால்தான் ஸந்த்யாவந்தனம் முதலான தன் நித்ய கர்மாவுக்கும், ச்ராத்தாதிகளைச் செய்யவும் யோக்யதையுண்டு. வைத்ய சாஸ்த்ர ரீதியாகக் கவனித்தால் இவை (சில நோய்களை அகற்றி பலத்தை அளித்தாலும்) நோயில்லாதவர்களுக்கு மதத்தை அளித்து மநதைக் கெடுக்கின்றன. வைத்யத்திற்காக இதை உட்கொண்டபின் ப்ராயச்சித்தம் செய்து கொள்ளவேண்டும், பெண்களுக்கு காயத்ரீ வேதமில்லாததால் பஞ்சகவ்யம் போதுமானது, ஆதலால் ருசி என்றோ பல மென்றோ காயத்ரி உள்ளோர் வெங்காயம் உள்ளிகளைச் சாப்பிடக் கூடாது,

78. கள்ளுக்குச் சமமானவைகள்: நகம்பட்ட ஜலம், உணவு காலம் தவிர மற்ற காலத்தில் இடது கையால் நீர் அருந்துவது, நின்றுகொண்டே அருந்துவது, ஒருவர் சாப்பிட்ட மிகுதி நீரை அருந்துவது, வெண்கலப் பாத்ரத்தில் வைத்த இளநீர், தாம்ரபாத்திரத்தில் வைத்த வென்னீரும், பாலும் ஸுரைக்குச் சமமானவை.

79, விலக்கத் தக்கவை: வண்ணன் தோய்க்கும் இடத்தில் ஸ்னனம் செய்தல், இரும்பு பாத்திரத்திலுள்ள ஜலம், ஸப்தமியிலும், பானுவாரத்திலும், பிரதிதினம்

இரவிலும் நெல்லிக்காய் சாப்பிடுதல், கையினுல் குழப்பிய மோர், பகலில் பால், இரவில் தயிர் ஸத்துமா முதலியன.

80. ஸூர்யன் அந்தந்த ராசியில் புகுவதை முதலாகக்கொண்ட மாதம் "ஸௌரமானம்" எனப்படும். அமாவாஸ்யை சென்றபின் ஆரம்பிப்பது "சாந்த்ர மானம்". சில கர்மாக்களை ஸௌரமான கணக்குப்படியும் சிலதை சாந்த்ரமான கணக்குப்படியும் அனுஷ்டிக்க வேண்டும், என்பது சாஸ்த்ர விதி.

81. துலாஸ்னனம், தீபாவளி, கார்த்திகை தீபம் தனுர்மாஸபூஜை, சிவராத்திரி வ்ருதம் இவைகளை ஸௌரமான கணக்குப்படியேதான் அனுஷ்டிக்கவேண்டும்.

82. "சந்த்ர தர்சனம்" சதுர்த்தி சந்த்ரனைத் தர்சிக்கக்கூடாது. அப்படி நேர்ந்தால், அபாண்டமான பழி நேரிடும். ஸ்ரீ கிருஷ்ணன் சதுர்த்தி சந்த்ரனைப் பார்த்ததால்தான், ஸ்யமந்தகமணியை அபஹரித்தார் என அபக்யாதி ஏற்பட்டது. அவர் ஜாம்பவானுடன் யுத்தம் செய்து மணியைக் கொண்டுவந்த சரிதத்தை நினைத்தால் அந்த தோஷம் அகலும்.

83. ஆயுளைக் குறைக்கும் கார்யங்கள்:— காலை வெய்யிலில் உடல் காய்தல், பிணப்புகை நம்மேல் படுதல், தன்னைவிட வயதில் பெரிய ஸ்திரீ இடம் போகம் செய்தல், கலங்கின ஜலத்தை வடிகட்டாமல் குடித்தல். இரவில் தயிர் சாப்பிடுவது இந்த ஐந்தும் அன்றன்றும் ஆயுளைக் குறைக்கும். ஔபாசனம் செய்யாமல் இருத்தல், பிறர் அன்னத்தைப் புஜித்தல், சாப்பிடத் தகாததைச் சாப்பிடல் இவைகளால் ஆயுள் குறையும் என யமனே கூறுகிருர்.

84. ஸாயங்கால வெய்யில், ஹோமப்புகை, வய தில் தன்னைவிடச் சிறிய ஸ்திரீ போகம், நிர்மலமான ஜலம் அருந்துதல், இரவில் பால் அன்னம் புஜித்தல் இவைகள் தினமும் ஆயுளை வ்ருத்தி செய்யும். நோயாளிக்கு உதவி செய்தல், ஆஹார நியமம், ஔபாசனம், பெரியோரைத் தினம் நமஸ்காரம் செய்தல் இவை ஆயுளை விருத்தி செய் பவை. அதிதிக்கு அன்னம் இடாவிடில் நமது ஸந்ததி, செல்வம் அழியும் என நாசிகேத சரிதம் கூறுகிறது.

85. விருந்தினரை வெளியில் நிறுத்திவிட்டு வீட்டில் சாப்பிட்டால் அந்த அன்னம் பசு மாம்ஸத்திற்கு ஸமம். தீர்த்தம் கள்ளுக்குச் சமம்.

86. கடனே வாங்காமல் இருத்தல் நலம். அவச்யம் இருந்தால் விரைவில் அதைத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும். அதில் பாக்கி வைக்கக் கூடாது. கடன் திருப் பிக்கொடுக்காமல் இருந்தால் கடன் கொடுத்தவர் மறு பிறப்பில் நமக்குக் குழந்தையாய்ப் பிறந்து கடனைத் திருப்பி அடையும்வரை நம்மிடம் இருந்து விட்டு கணக்கு ஆனவுடன் இறந்துவிடுவர். அதையே "அது கடன்" எனக் கூறுகிறோம்.

87. வரவுக்கு மிஞ்சி செலவு செய்யக் கூடாது. ப்ராணனைக் காட்டிலும் மானமே பெரிது. மானம் போகும்படியான கார்யம் செய்யக்கூடாது. மானம் கெட்ட வாழ்வு வாழ்வல்ல.

88. உடல், நீர்மேல் குமுழிபோல் நிலை இல்லாதது. பொருளும் சாச்வதமானதல்ல. நாளைக்கு நல்ல கார்யம் செய்யலாம் என்று இருக்கக்கூடாது. நாளை நாம் இருப் போம் என்பது என்ன நிலை? நினைத்தவுடன் நல்லதைச் செய்யவேண்டும்.

ஸ்ரீ ராமரும் லக்ஷ்மணரும் இலேயில் உட்கார்ந்து புஜிக்கும்போது, ஓர் அதிதி வந்தார். லக்ஷ்மணன், அவரை "சற்று பொறுத்திருங்கள், வேறு அன்னம் வடித்துப் போடச் சொல்லுகிறேன். உண்ட மிகுதியைப் போடக் கூடாது" என்ருர். ராமரோ அதிதியைக் கூப்பிட்டு 'சித்தம், வித்தம், பணம், ஜீவன் இவை க்ஷணிகமானவை, அதாவது அடுத்த க்ஷணம் இப்படியே இருக்கும் எனக் கூற முடியாதது. எங்களுடன் உட்கார்ந்தே புஜியும்" என்ருர்.

89. சந்தனக்கல் மீதோ, கட்டை மீதோ அறைத்த சந்தனத்தை வைக்கக்கூடாது. கல்லில் வைத்த சந்தனம், பூனே தின்று மிகுந்த அன்னம். நீரில் தன் நிழலேப் பார்ப்பது இவை இந்த்ரனது ஐச்வர்யத்தைகூட அகற்றி விடும். நம்மைப்பற்றிக் கேட்பானேன்.

90. ஆட்டின் கால் புழுதி, கழுதையின் கால் தூசி. துடப்பத்தால் பெருக்கும்போது மேல் படும் தூசி, ஸ்த்ரீகளுடைய பாததூளி இவை நம்மேல் பட்டால் இந்த்ரனின் செல்வத்தைக்கூட அகற்றிவிடும். ஆதலால் அவைகள் நம்மேல் படாதபடி பார்த்துக்கொள்ளவேண்டும்.

91. ஆறு அறிவு படைத்த நம் உடலேக்கொண்டு அழியாத ஆனந்தம் எனும் மோக்ஷம் பெறவேண்டும். பகவானிடம் பக்தி செய்யவேண்டும். பகவானே மனதில் தாங்கி நடக்கும் பாகவதாள் நடமாடும் கோவிலாம். அவர்களுக்குச் செய்யும் உபசாரம் பகவத் பூஜையாகும். பாகவதராக இல்லாவிடினும் எங்கும் உள்ள இறைவனது அம்சம் ஸகல பிராணிகளிடமும் இருக்கின்றதல்லவா? ஆதலின் பரோபகாரம் செய்வதைவிடச் சிறந்த புண்யம் இல்லே. முடிந்தவரை வாக்கினுலும், உடலினுலும் பொருளினுலும் பிறருக்கு உதவி செய்யவேண்டும்.

92. தன் ஊரில் தன் வீட்டிலுள்ளபோது சாஸ்த்ரம் கூறியபடி ஆசாரத்தைக் கைக்கொள்ளவேண்டும். வெளி ஊர் சென்ருல் அதில் பாதி ஆசாரம் அனுஷ்டித்தால் போதும். நகரங்களில் கால்பங்கும், ப்ரயாணம் செய்யும்போது, வழியில் முடிந்தவரையிலும் ஆசாரம் அனுஷ்டித்தால் போதுமானது.

93. ஸந்த்யா வந்தனத்தில் அர்க்யம் கொடுத்தபின் ப்ரதக்ஷிணம் செய்யவேண்டும். அதுவே ஆத்ம ப்ரதக்ஷிணமாம். (தன்னைத்தானே சுற்றுவது) தேவாலயத்திலும், நதீ தீரத்திலும், அரச மரத்தின் அருகிலும் ஆத்ம ப்ரதக்ஷிணம் செய்யக் கூடாது. ப்ரும்மஹத்தி பாபம் நேரும். நமது பின்புறத்தைக் காட்டுவது பாபம்.

94. காது இடுக்கில் புஷ்பத்தைத் தரிப்பது. புருஷர் கழுத்தில் மாத்திரம் சந்தனம் பூசிக்கொள்வது, தலையில் துளஸீதளத்தை வைத்துக்கொள்வது பாபமாகும். புஷ்பத்தைச் சிகையிலும் துளஸியைக் காதிலும் சந்தனத்தை மார்பிலும் கரங்களிலும் பூசிக்கொள்ளவேண்டும். பெண்கள் இரு கரங்களிலும் கழுத்திலும் சந்தனம் தரிக்கலாம்.

95. நமது வயஸ், ஆஸ்தி, வீட்டுக் கலகம், நமக்கு உபதேசமான மந்த்ரம், நமது போகம், தானம், நமக்கு பிறர் செய்த ஸன்மானம், அவமானம், நமக்கு உள்ள கடன் இவைகளை ரஹஸ்யமாகவே வைத்துக்கொள்ள வேண்டும். பிறர் கேட்டாலும் ஸ்தூலமாக ஏதோ இவ்வளவு எனக் கூறவேண்டும். ஆப்தமான குரு, நண்பர், இவர்களிடம் எதையும் ஒளிக்கக் கூடாது.

96. பிறருக்குச் செய்யும் துன்பம் கடவுளுக்கே செய்ததாகும். அதன் பயனைச் செய்தவனே அனுபவிக்க

வேண்டும். ஆதலால், பரோபகாரம் செய்பவன் தனக்கே உபகாரம் செய்தவன் ஆவன். பிறருக்குத் துன்பம் செய்தவன் தனக்குத்தானே துன்பம் தேடியவன் ஆவான். ''பரோபகார : புண்யாய, பாபாய பரபீடனம்'' என்பது சாஸ்த்ர ஸாரம்.

97. வேதம் அறிந்த வேதியர் உடலில் ஸமஸ்த தேவதைகளும் வஸிப்பதாக வேதம் கூறுகிறது. அவருக்குச் செய்த பூஜை ஸமஸ்த தேவதைகட்கும் செய்த பூஜையாகும். அதேபோல் அவருக்குச் செய்யும் தீமை எல்லா தேவருக்கும் செய்த தீமையாகும். யாரையும் ஹிம்ஸிக்கலாகாது. விசேஷமாக ப்ராமணரை ஹிம்ஸிக்கவே கூடாது. விளையாட்டாக ஸப்த ரிஷிகளிடம் ஸாம்பன் பெண்வேஷம் பூண்டு 'என்ன குழந்தை பிறக்கும்' எனக் கேட்டான். அதனுல் அந்த குடும்பமே அழியும்படியான கோடாலி பிறந்தது. ந்ருகன் எனும் சக்ரவர்த்தி பிராம்மண அபசாரம் செய்து ஓணுனகப் பிறந்தான்.

98. நடுப்பகலிலோ, நடு நிசியிலோ, சிராத்ததில் புஜித்த பிறகோ, இரு ஸந்த்யா காலங்களிலோ, நான்கு தெருக்கள் கூடுமிடத்தில் நிற்கக் கூடாது.

99. வஸ்த்ரமே இல்லாதவன், கச்சம் கட்டாதவன், கௌபீனம் மாத்திரம் கட்டியவன், கலஹத்தில் ஆசையுள்ளவன் இத்தகைய க்ருஹஸ்தனிடம் மூதேவி தாண்டவமாடுவாள்.

100. வண்டி வரும் இடத்திற்கு 5 முழமும், குதிரைக்கு 10 முழம், யானைக்கு 1000 முழம் தூர இருக்கவேண்டும். துஷ்டனுக்கோ வெகு தூரத்திற்கப்பால் இருக்கவேண்டும். இவை முற்றிலும் த்ருஷ்ட பலன். அதாவது, இங்கேயே இப்போதே பலனைத் தருவன. அத்ருஷ்டம் எனில்,

இறந்தபின் பரலோகத்தில் அல்லது மறு பிறவியில் பலனைத் தருவதாம். இவைகள் மூலம் வரக்கூடிய ஆபத்தை உணர்ந்து விலகி நில் என்று கூறும் சாஸ்த்ரம் நம் உடலைக் காக்க எவ்வளவு கண்ணும் கருத்துமாய் இருக்கிறது என நன்கு அறியலாம். அதை நாம் பின் பற்ற வேண்டாமா? (இவை எல்லாவற்றையும் விட ஆபத்தான மோட்டார் லாரியைப்பற்றி நாமே தெரித்து விலகவேண்டும்.)

101. தேளுக்கு விஷம் கொடுக்கில் இருக்கிறது. ஈ கொசுகளுக்கு விஷம் தலையிலே. பாம்புக்குப் பல்லில் விஷம், துஷ்டருக்கோ எல்லா அங்கமும் விஷம். ஆதலால் துடஷ்ரைக் கண்டால், தூர விலகவேண்டும்.

102. புத்ரனுக்குக் கடனை வைத்துவிட்டு இறக்கும் தந்தை சத்ருபோலாவான். கல்வி, அடக்கம் முதலியவைகளைக் கற்பிக்காத பிதா சத்ரு. ரூபமில்லாதவளும், அதி ரூபவதியாயிருப்பவளுமான பத்னி சத்ரு.

103. அக்னி ஹோத்ரம், நமது வயல், வீடு, கோவில் கர்ப்பிணி, வயதானவர், குரு, ராஜா இவர்களிடம் போகும்போது வெரும் கையுடன் செல்லக்கூடாது. அக்னி ஹோத்ரத்திற்கு ஸமித், வயலுக்கு எருவாகும்படி சாணி, வீட்டிற்கு உபயோகமான பொருள், கோவிலுக்குப் பழம் புஷ்பம், கற்பூரம், தேங்காய், எண்ணை, மற்றவருக்குத் தின்பண்டம் எடுத்துச் செல்ல வேண்டும். கண்ணனுக்கு அவில் கொடுத்த குசேலர் குபேர செல்வம் பெற்றார்.

104. பரம ஏழைகளுக்கு அளிக்கும் தானம், பூஜை இல்லாமல் நின்றுபோன கோவிலுக்கு பூஜை ஏற்படுத்து

வது, அனுதையான பிணத்திற்கு விதிப்படி ஸம்ஸ்காரம் செய்வது இம் மூன்றும் அச்வமேதத்திற்கு ஸமமான ப்லனைத் தரும்.

105. வாய் கொப்பளிக்கும் போதும், பல் துலக்கும் போதும் தர்ஜனீ எனும் ஆள்காட்டி விரலை உபயோகிக்கக் கூடாது, உபயோகித்தால் நரகம் கிட்டும்.

106. நமது பெண்ணுக்குப் புத்ரன் உண்டாகும் வரை அவளது புகுந்த வீட்டில் நாம் புஜிக்கலாகாது.

107. உணவு உட்கொள்ளும் ஸமயத்தில், கை கால்களை அலம்பி ஆசமனம் செய்து வடக்கு தவிர மற்ற திக்கில் பலகைமீது அமரவேண்டும்.

108. ஒரு வஸ்த்ரத்துடனே, ஈரத் துணியுடனே, பட்டை உடுத்திக்கொண்டோ, ஜபம் செய்யாமலோ, நெற்றிக்கு இடாமலோ, தலைமயிரை அவிழ்த்துக் கொண்டோ, சொக்காயுடனே உண்ணக் கூடாது.

109. வைச்வதேவம் செய்யாத அன்னம், ஸ்வாமி நிவேதனம் செய்யாத அன்னம், குருவினுடையதாக இருந்தாலும் புஜிக்கக் கூடாது.

110. வைச்வ தேவத்திற்காகவும், ஸ்வாமி நிவேதனத்திற்காகவும் அன்னத்தைத் தனியாக எடுத்து அபிகாரம் செய்து வைத்துவிட்டு சேஷமில்லாத அன்னத்தால் ப்ராணுக்னி ஹோத்ரம் செய்யவேண்டும்.

111, ப்ராணுக்னி ஹோத்ரம் செய்வதற்குள் ஒன்றையும் புஜிக்கலாகாது. அன்னம் வைத்தவுடன் இலையைப் பிடித்துக்கொள்ளவேண்டும்.

112. பிறர் போட்டே ஆபோசனம் ஏற்கவேண்டும். பங்க்தியில் எல்லோரும் ஒன்ருக அதை உட்கொள்ள

வேண்டும். உரியும் சப்தம் கேட்காமலும், பாக்கி இல்லாமலும் அந்த தீர்த்தத்தை உட்கொள்ளவேண்டும்.

113. இலையில் அன்னம் வைத்ததிலிருந்து ப்ராணுக்னி ஹோத்ரம் முடியும்வரை எவருடனும் பேசலாகாது. போஜனம் முடியும்வரை மௌனமாய் இருப்பது நலம். ஆனுல் அதிதியுடன் சாப்பிடும்போது அவரை நன்கு உபசரிக்க வேண்டும். இதனுல் மௌனபங்கம் ஏற்படாது. ஐந்து (6) ஆஹுதிகளையும் தனித்தனியாகப் பல்லால் கடிக்காமல் விழுங்கவேண்டும்.

114. வாய்கொள்ளும் அளவே அன்னத்தைக் கையில் எடுத்துக்கொண்டு, 5 விரல்களும் வாயினுள் போகும்படி சாப்பிடவேண்டும். நாக்கில் அன்னத்தை வைத்து வழித்து, மிகுதியை இலையில் வைக்கக்கூடாது. அதை மறுபடி எடுத்து உண்டால் நாய் தான் கக்கியதைச் சாப்பிடுவதுபோலாகும்.

115. பலர் கூடிய பங்க்தியில் உட்கார்ந்து புஜிக்கக் கூடாது. எல்லோருக்கும் முன்பும் உட்கார்த்து புஜிக்கலாகாது. பங்க்தியில் உட்கார நேர்ந்தால் "த்ரிஸுபர்ணம்" என்ற மந்த்ர படனம் செய்யவேண்டும். அதை அறியாதார் பகவன் நாமாவைச் சொல்லவேண்டும்.

116. ஒவ்வொரு கபளத்தையும் உட்கொள்ளும் போது "கோவிந்த, கோவிந்த" எனக் கூறவேண்டும். அப்படி கூறி புஜித்தால் உபவாஸம் இருந்த பலன் உண்டாகும்.

117. வயிற்றிற்கு இரண்டு பங்கு அன்னமும் ஒரு பங்கு ஜலமும் உட்கொண்டு மற்றோர் பங்கு காற்று ஸஞ்சரிக்கும்படி காலியாக விடவேண்டும். வயிறு திணரும்படி புஜிக்கக்கூடாது.

118. வலது புறத்தில் தீர்த்த பாத்ரத்தை வைத்துக் கொள்ள வேண்டும். இடது புறத்தில் வைத்த தீர்த்தம், போஜன காலந்தவிர மற்ற காலத்தில் இடது கையால் குடிக்கும் தீர்த்தம், நின்றுகொண்டே குடிக்கும் தீர்த்தம், நாமோ, பிறரோ குடித்து, மிகுந்த தீர்த்தம், இவை, கள் குடிப்பதற்கு ஸமமாம்.

119. தைல பாகம் (அதாவது வடை, அப்பளாம்) பழம், பக்ஷ்யம் தவிர மற்ற கரி, காய், அன்னம் முதலிய வைகளைக் கையால் பரிமாறினும், இரும்புக் கரண்டி யால் பரிமாறினும், இடது கையால் பரிமாறினும் அவை பசு மாம்ஸத்திற்கு ஸமமாம்.

120. பங்க்தியில் ஒருவர் எழுந்திருந்தால் மிகுதி இலைகள் எல்லாம் எச்சிலாகும். அவஸரம் நேர்ந்தால், இரு புறமும் ஜலத்தால் கோடு போட்டு எழுந்திருக்கலாம். அது பங்க்தியை வேறாகச் செய்கிறது.

121. உத்தர ஆபோசனமும் பிறரே போட வேண்டும். அதை உடனே உட் கொள்ளலாம். எல்லோரும் சேர்ந்து சாப்பிட வேண்டும் என்ற நியமம் இல்லை. அந்த தீர்த் தத்தைப் பாதி உட்கொண்டு, மிகுதியை இலையைச் சுற்றி வலது புறம் அடியில் பித்ரு தீர்த்தத்தால் விட வேண்டும்.

122. விரல்களின் நுனியால் விடுவது தேவ தீர்த்தம். அடியால் விடுவது ப்ரும்ம தீர்த்தம். சுண்டு விரல் பக்க மாக விடுவது ரிஷி தீர்த்தம். கட்டை விரல் பக்கமாக விடுவது பித்ரு தீர்த்தமாம்.

123. அந்த உச்சிஷ்ட தீர்த்தம் ரௌரவ நரகத்தி லிருந்து "தாஹம், தாஹம்" எனக் கதறுபவருக்கு அக்ஷய்யமான தீர்த்தமாகச் செல்லுமாம்.

124. "ரௌரவே அபுண்ய நிலயே பத்ம அர்புத நிவாஸினும், அர்த்தினும் உதகம் தத்தம் அக்ஷய்யம் உப திஷ்டது" என்ற ச்லோகத்தைக் கூறி கட்டை விரல் பக்க மாக இலையின் வலது பக்கம் விட வேண்டும்.

125. அன்னம் கொண்டு வரும் பொழுது "அஸ் மாகம் நித்யம் அஸ்து ஏதத்"—இது நமக்கு நித்யம் கிடைக்கட்டும் என்று கூற வேண்டும். எழுந்திருக்கும் போது "அன்ன தாத : ஸுகீ பவ"—அன்னம் அளித்த வரே ஸுகமாக இரும் என்று கூற வேண்டும்.

126. கை அலம்பி ஆசமனம் செய்யும்வரை ஒரு வரை ஒருவர் எச்சல் கையுடன் தொட்டால் ஸ்னனம் செய்ய வேண்டும். எச்சல் கையுடன் நாமே ஜலத்தை மொண்டு கொள்ளலாகாது. எச்சல் கையுடன் ஒருவர் கொடுத்த ஜலத்தால் கை அலம்பக் கூடாது. கை அலம்பி ஆசமனம் செய்தவரே பிறருக்கு ஜலம் எடுத்துக் கொடுக்க வேண்டும். 16 முறை வாய் கொப்பளிக்க வேண்டும்.

127. உட்கார்ந்து ஆசமனம் செய்தபின் சர்யாதி, ஸுகன்யா, ச்யவனர், இந்த்ரன், அச்வினீதேவர் இவர் களை நினைத்து ஜலத்தால் கண்களைத் துடைத்தால் கண் ஒளி குறையாது. மங்காது.

சர்யாதிம்ச ஸுகன்யாஞ்ச ச்யவநம் சக்ரம் அச்விநௌ |
புக்தமாத்ரே ஸ்மரேத் யஸ்து சக்ஷு : தஸ்ய நஹியதே ||

என்று கூற வேண்டும்.

128. "ஆகஸ்தி : அக்னி : படபா நலச்ச, புக்தம் மயா அன்னம் ஜரயந்து அசேஷம் | ஸுகஞ்சமே தத்பரிணும ஸம்பவம், யச்சந்து அரோகம் மம ச அஸ்து தேஹே || எனக் கூறி ஜலத்துடன் நாபியையும் வயிற்றையும் தடவ வேண்டும்.

"அகஸ்த்யர் அக்னி பாடபாக்நி ஆகியவர் நான் உண்ட அனனம் எல்லாவற்றையும் ஜீர்ணமாகும்படி செய்யட்டும். அது நன்கு பரிணும மாகட்டும். உடல் அரோகமாக இருக்கட்டும்" என்பது அதன் கருத்து.

129. சாப்பிட்டவுடன் மெதுவாக 100 அடி நடக்க வேண்டும். சாப்பிட்டவுடன் உட்கார்ந்தாலும் படுத்தாலும் வயிற்றில் நோய் உண்டாகும். வேகமாக நடந்தாலும் ஓடினுலும் ஆயுஸ் குறையும். யமபயம் உண்டாகும்.

130 உத்தர ஆபோசனம் போடுவதற்கு முன் அன்னத்தை எடுத்து வந்து விசாரிக்க வேண்டும். அப்படிச் செய்யா விட்டால் அதுவரை பரிமாறிய புண்யம் வராததுடன் பாபமும் உண்டாகும். ச்ராத்த ப்ராம்மணருக்கு அங்ஙனம் செய்வது வழக்கம்.

131. அதிதிக்கு உணவான பின் கொஞ்சமாவது தாம் பூலத்துடன் தக்ஷிணை கொடுக்க வேண்டும். இல்லையேல் அன்னதான பலன் வராது.

132. பெரியோரைக் கண்டவுடன் எழுந்து நமஸ்காரம் செய்ய வேண்டும். புருஷர்களுக்கு 'அபிவாதயே" சொல்ல வேண்டும். "சதுஸ்ஸாகர பர்யந்தம் கோப்ராம்மணேப்ய: சுபம்பவது" என்று முதலில் கூறி அதன் பிறகு அபிவாதயே சொல்பவர் சிலர். நமஸ்காரத்திற்கு முன்பு சிலர், பின்பு சிலர் அபிவாதநம் செய்வர். அவரவர் ஸம்ப்ரதாயப்படி செய்வதுதான் தர்மம். சொல்லாமல் மாத்ரம் இருக்கக் கூடாது.

133. நமஸ்காரம் செய்த பின் பெரியோரைத் தொடும்படியான ஸமயமாக இருந்தால் அபிவாதயே கூறி நமது கைகளைக் கத்ரிக்கோல்போல் (அதாவது ஒரு கை மீது ஒரு கையை வைத்து) ஏககாலத்தில் இரு கரங்

களாலும் அவர்கள் 2 திருவடிகளையும் தொட வேண்டும். அப்படிச் செய்தால் நமது வலது கையால் அவர் வலது காலையும் இடது கரத்தால் இடது காலையும் தொடமுடியும். தொட முடியாதபோது பாதத்தின் அருகே அம் மாதிரி கைகளை வைத்து பூமியைத் தொட வேண்டும். பெரியோர் பாதம் மஹிமை உள்ளது.

134. அபிவாதயே, பார்க்கவ, ச்யாவந, ஆப்நவாந, ஔர்வ, ஜாமதக்ந்ய, பஞ்சார்ஷேய, ப்ரவரான்வித, (ஸ்ரீவத்ஸ கோத்ர:) ஆபஸ்தம்ப ஸூத்ர: யஜுஸ்சாகாத்யாயீ, ஸோமதேவ ஸர்மா நாமாஹம் அஸ்மிபோ: என்பது போல் அவரவர் ப்ரவரம் கோத்ரம் ஸூத்ரம், வேதம், சர்மா நாம இவைகளைக் கூற வேண்டும். ப்ரவரான் வித: என்று கூருமல் ப்ரவரான் வித-என்று கூற வேண்டும்.

135. நமது கோத்ர ரிஷியினிடமிருந்து உண்டான ப்ரபலமான யோக்யதையுள்ள ரிஷிகளே ப்ரவர ரிஷிகள் எனப்படுகிருர்கள். சில கோத்ரத்தில் 7 ப்ரவர ரிஷிகள் சிலதில் 5, சிலதில் 3, சிலதில் 1. ஆதலால் ஸப்தார்ஷேய, பஞ்சார்ஷேய, த்ர்யார்ஷேய, ஏகார்ஷேய எனக் கூறுகிருேம். அபிவாதயே எனில் இவைகளைச் சொல்லி நான் யாரென தெரிவிக்கிறேன் என்று பொருள்.

136. ஆதியில் 9 ரிஷிகளிட மிருந்தே கோத்ரங்கள் உண்டாயின- அவை பின்னர் நூற்றுக் கணக்காக வளர்ந்தன. நாம் எந்த ரிஷியின் பரம்பரையிலிருந்து நேராக உண்டானேமோ அவர்களையே கோத்ர ரிஷி என்கிருேம். ஸமானமான கோத்ரம் உள்ளவர் ஸகோத்ரர், ஸமான ப்ரவரமுள்ளவர் ஸப்ரவரர். ஸகோத்ரரையும் ஸமான ப்ரவரரையும் மணந்து கொள்ளக் கூடாது.

137. முதலில் ப்ரவரம், பிறகு கோத்ரம், பிறகு ஸூத்ரம் என்பதைக் கூறுகிருேம். பிறகு நமது வேதம்

எது என்றும், பிறகு சர்மா என்ன என்றும் அதன்பின் நாமா என்ன என்றும் கூறுகிறோம். அதன்பின் அஸ்மி போ: என்கிறோம். 'அஸ்மி' எனில் (கீழ் சொன்னவை களுடன் கூடியவனாக) இருக்கிறேன் என்று பொருள். "போ:" எனில் பெரியோரை மரியாதையாக அழைப் பதாம்.

138. ஆச்வலாயநம், கௌஷீதகம், போதாயனம், ஆபஸ்தம்பம், பாரத்வாஜம், ஸத்யாஷாடம், வைகாநஸம், காத்யாயநம், த்ராக்யாயணம், ஜைமிநீயம் என ஸூத்ரங்கள் பல உள. அந்தந்த ரிஷிகள் கர்ப்பாதாநம் முதல் என்ன என்ன வைதிக ஸம்ஸ்காரம் செய்ய வேண் டும் என விதித்திருக்கிறார்கள். மங்களமானதைப் பூர்வ ப்ரயோகம் எனவும், மரண விஷயமானதை அபரம் என் றும் கூறுவர்.

139. ரிக் வேதத்திற்கு ஆச்வலாயநம், கிருஷ்ண யஜுர் வேதத்திற்கு போதாயந, ஆபஸ்தம்ப பாரத்வாஜ, ஸத்யாஷாட, வைகாநஸ எனப் ப்ரஸித்தமானவை. சுக்ல யஜுர் வேதத்திற்கு காத்யாயநம் ஸாம வேதத்திற்கு த்ராஹ்யாயணம் ஜைமிநீயம் என ஸூத்ரங்களாம்.

140. ஒரு வேதத்திற்கு பல ரிஷிகள் ஸூத்ரம் இயற்றினர். நமது பெரியோர் கைகொண்ட ஸூத்ரத் தையே நாம் கைக்கொள்ள வேண்டும். சிகை, புண்ட்ரம், ஸூத்ரம், ஆசாரம் இவைகளை நம் பெரியோர் ஆசரித்த படி நாம் செய்ய வேண்டும். நம்மிஷ்டப்படி மாற்றினால் பாபம் உண்டாகும். நம் ஸூத்ரம் செய்து வைப்பவர் கிடைக்க வில்லையென்று அன்ய ஸூத்ரத்தால் செய்வது தகாது. நாம் வேறு வகையின்றி அப்படிச் செய்தாலும் பிறகு ஸ்வஸூத்ரத்தைத் தேடி ஒழுங்காகச் செய்ய வேண்டும்.

141. ரிக்சாகாத்யாயி, யஜுஸ் சாகாத்யாயி, ஸாம சாகாத்யாயி என அவரவர் வேதத்தை மறவாமல் பிறகு கூற வேண்டும்.

142. பிறகு யாருக்கு சர்மாவும் பெயரும் ஒன்ருக இருக்கிறதோ அவரே "சர்மா நாமாஹம்" என்று கூற வேண்டும். சர்மா வேறு, பெயர் வேருனல் "சர்மாஹம்" என்று மாத்ரம் கூற வேண்டும்.

143. ப்ரஸவித்த உள்ளே, மண் பூமியானல் கொஞ்சம் மண்ணைப் பெயர்த்து எறிந்து புதுமண் போட்டு, தள வரிசை செய்த இடமானல் வைக்கோலேப் போட்டுக் கொளுத்திப் பசுமாட்டை அங்கே ஓட்டி அதன்பின் புண் யாவாசந ஜலத்தால் ப்ரோக்ஷித்தால்தான் சுத்தியாகும்.

144. ப்ரஸவித்த ஸ்த்ரீ தீட்டு நீங்கி பாண்ட ஸ்பர்சம் செய்யும் தினத்தில் புதிதாக மாங்கல்யச் சரடு கட்டிக் கொண்டு பஞ்சகவ்யம் சாப்பிட்டால்தான் தேவ கார்ய பித்ரு கார்யங்களேச் செய்ய அர்ஹமாவாள். பாண்ட ஸ்பர்சம் என்ருல் பாத்ரத்தைத் தொடுவதாம்.

145. சாவுதீட்டு, ப்ரஸவ தீட்டுகள் அகலும் திநத்தில் புருஷர் காலேயில் வழக்கப்படி ப்ராதஸ்நாநம், ஸந்த்யா வந்தநம் முதலிய கர்மாக்களேச் செய்து தீட்டு நீங்குவதற் காக காலே 8½- மணிக்குமேல் முழுகி ஸ்நாநம் செய்ய வேண் டும். பழைய பூணலேக் களைந்து புதுப் பூணலேத் தரித்துக் கொள்ள வேண்டும்.

146. மரணம் நேர்ந்தால் இறந்தவரை நாடி தடாக குண்டம், க்ரஹகுண்டம் என இரண்டு பள்ளத்தில் சிறிய கருங்கல்லேப் புதைத்து அதில் ப்ரேத ரூபனை இறந்தவர் ஆவாஹநம் செய்யப் படுகிருர். அப்படிக் க்ரஹகுண்டத் திற்காகக் கல் புதைக்கப்பட்ட வீடு ஸபிண்டீகரணம் முடி யும் வரை அசுத்தமே.

147. க்ருஹகுண்டம் வேறிடத்தில் ஏற்பட்டிருந்தால் பசும்சாணி ஜலம் தளித்துப் புண்யாஹவாசநம் செய்தால் அந்த வீடு சுத்தமாகும். அத்தகைய வீட்டில் வாடகை கொடுத்து குடியிருப்போர் இடம் சுத்தமானதால் பூஜை செய்யலாம்.

148. நமக்குத் தீட்டு வந்தபோது அக்நிஹோத்ரமாஞல், யஜமாநன் ஸ்நானம் செய்து தத்கால சுத்தனுகி அக்நிஹோத்ரம் செய்யலாம். ஔபாஸநம், பூஜை இவைகளை நாம் செய்யக் கூடாது. அவைகளை விடவுங் கூடாது. தீட்டில்லாதவர்களைக் கொண்டு செய்விக்க வேண்டும். பூஜை செய்யாமலிருக்க கூடாது.

149. ஸந்த்யாவந்தனம் தவிர மற்றெந்த கர்மாவை யும் தீட்டில் செய்யலாகாது. ஆனுல் க்ரஹண ஸ்நானம் தர்ப்பணம், ஏகாதசி, ச்ரவணத்வாதசி, சிவராத்ரி போன்ற நித்ய உபவாஸம் இவைகளைச் செய்ய வேண்டும்.

150. பஞ்சமர் நமது வீட்டிற்குள் தெரியாமல் நுழைந்து விட்டால் வீட்டிலுள்ள மண்பாத்ரங்களைத் தூரே எறிந்து விட்டு மற்றவைகளை கோமயத்தாலும், புண்யாஹ வாசந தீர்த்தத்தாலும் ப்ரோக்ஷிக்க வேண்டும். பக்வமான அன்னுதிகளை எறிந்து விட வேண்டும். பசுவை உள்ளே ஓட்டி அதன் பாதம்படும்படி செய்த பின்பே அந்த இடம் சுத்தமாகும்.

151. பசு அமிழ்ந்து ஜலம் குடிக்கும் படியான ஜல முள்ள குளம், முதலியவை சுத்தமானவை. அதைப் பஞ்சமாதிகள் தொட்டாலும் அசுத்தமில்லை. அதே இடம் ஜலம் சுண்டி விட்டால் பஞ்சமர் தீண்டினுல் அதை நாம் உபயோகிக்கக் கூடாது.

152. அதிக ஜலமுள்ள கிணர், குளம் முதலியவற் றில் பூனை, நாய், மனிதன் முதலியவை விழுந்து இறந்

தால் அவ்விடத்திலிருந்து 100 குடம் ஜலத்தை இறைத்தும் கிணற்றில் மனிதன் இறந்தால் பூரா ஜலத்தையும் இறைத்தும் பஞ்சகவ்யம் புண்யாஹவாசந ஜல மிவைகளால் சுத்தம் செய்த பின்பே அந்த ஜலத்தை உபயோகிக்க வேண்டும்.

153. ப்ராம்மணருடைய பாதம் பரம பவித்ரம். அவர் பாததூளிபட்டு பவித்ரமான வீடே வீடு. அவர்கள் ப்ருஷ்டத்தில் மூதேவி இருப்பதால் அவர்களைப் பூமியில் உட்காரவைக்காமல் ஆஸநத்தில் அமரும்படிச் செய்ய வேண்டும்.

154. பசுவின் பின்புறமும் கால்களும் சுத்தம் எழுந்தவுடன் பசுவின் பின்புறத்தைத் தர்சிக்க வேண்டும். அங்கே லக்ஷ்மி வஸிக்கிருள். முகமும் முகத்தால் முகர்ந்ததும் அசுத்தம், ததீசியின் உடல் மாம்ஸத்தை நாக்கிஞல் நக்கி, அதற்கு பதிலாக யக்ஞத்தில் ஹவிஸ்ஸைப் பெற்றது முன்னம் பசு. அதனுல் அவர் மனைவி பசுவின் முகம் அசுத்தம்என சபித்தாள்.

155. பசுக்களை வளர்த்து அதன் பாலைக் கூடச் சாப்பிடாமல் அதன் கன்றுகளை ஊட்ட விட்டு அதன் வாயில் உண்டாகும் நுறையால் ஜீவித்து வந்தார் ஒருரிஷி. அவர் பெயர் பேநபர். (நுறையைக் குடிப்பவர்). ரந்திதேவனது யாகத்தில் தங்கள் உடலை விட்டு அழகான கொம்புள்ள பசுக்களாகத் தாங்கள் ஆக வேண்டுமென அவரை உத்தரவு கேட்டன. அவர் மறுக்கவே கொம்பால் முட்டி அவரைக் கொன்றன. காமதேனு உங்கள் முகம் அசுத்தமாகும் என சபித்தாள். அதனுல் பசுவின் முகம் அசுத்தம்.

156. பசுவின் பின் புறத்தைப் பூஜித்து அலங்காரமாக நெற்றிக் கிடலாம். இரு கொம்புகளுக் கிடையே

ருத்ரன் வஸிப்பதால் அங்கு திலிபராஜா பூஜை செய்தார் என காளிதாஸன் கூறுகிறுர். பின்புறமே பூஜைக்கும் தர்சநத்திற்கும் ஏற்ற இடமாம். முதலில் அங்கு பூஜை செய்து விட்டு பின்னற் முன்புறத்தைப் பூஜிக்கலாம்.

157. கோ பூஜை, கோ பணிவிடை, கோவுக்குப் புல், வைக்கோல் போட்டு பூஜிப்பது, கோவுக்குக் கழுத்தில் சொறிவது, தினவு நீங்க தேய்த்துக் கொள்ள கல் நடுதல், மேய்வதற்கு பூமி அளித்தல் இவை மிக்க புண்யம் தரும்.

158. மனைவி கர்ப்பம் என்று ஸ்பஷ்டமாகத் தெரிந்த பின் பதிக்குக் கர்ப்ப தீக்ஷை முதலிய நியமங்களுண்டு. கர்ப்ப தீக்ஷை உள்ளவன் தாநம் வாங்கக் கூடாது. வபநம் செய்து கொள்ளக் கூடாது, ப்ராம்மணுர்த்தம் சாப்பிடக் கூடாது. ஸமுத்ர ஸ்நானம் செய்யக் கூடாது. யாத்ரைப் போகக் கூடாது. பிணம் சுமத்தல், சுடுகாடு போதல் கூடாது. இதை மீறி நடந்தால் அவனுக்கு பாபமும் சிசுவுக்குத் துன்பமும் ஏற்படும்.

159. க்ருச்ரம்: நமது உடலில் உண்டான பாப மகல க்ருச்ரம் செய்து கொள்ள வேண்டும். உடலை வாட்டுவது கஷ்டப்படுத்துவது என்று அதன் பொருள். அதாவது உபவாஸத்தாலும் பச்சாதாபத்தாலும் நமது பாப மகல வழி தேடுவதாம்.

160. க்ருச்ரப்ரதிநிதி: உபவாஸமிருக்க முடியாதவர் ஒரு ப்ரஜாபத்ய க்ருச்ரத்திற்குப் பதில் 10 ஆயிரம் காயத்ரி ஜபிக்க வேண்டும். அதுவும் முடியாதவர் விதிப்படி 200 ப்ராணுயாமம் செய்ய வேண்டும். அதற்கும் சக்தியில்லாதவர் 1000 முறை தில ஹோமம் செய்ய வேண்டும். அதற்கும் சக்தி இல்லாதவர் 30 முறை வேத பாராயணம் செய்ய வேண்டும். அதற்கும் சக்தி இல்லா

தவர் 60 அல்லது 24 அல்லது 12 ப்ராம்மணருக்காவது போஜனம் அளிக்க வேண்டும். அதுவும் முடியாதவர் ஒரு கோதானம் செய்ய வேண்டும். அதுவும் முடியாதவர் கோமூல்யம் என்ற பசுவின் விலை அல்லது ஒரு வராஹனைத் தர வேண்டும். கோமூல்யம் ரூ. 3-2-0 என சில விடங்களில் சொல்லப் படுகிறது. தமிழ் தேசத்தில் ஒரு க்ருச்ரம் என்பது (0-6-3) ஆறேகாலணவாக செய்யப் படுகிறது.

161. ஒரு கர்மாவைச் செய்ய நமக்கு யோக்யதை உண்டாக வேண்டுமானல் 7 அல்லது 6 அல்லது 3 க்ருச்ரமாவது தானம் செய்ய வேண்டும்.

162. ஒருவன் இறந்தவுடன் யாமம் கழிந்த பின்பே அவ்வுடலை அப்புறப் படுத்த வேண்டும். 3 யாமத்திற்கு மேல் வைத்திருக்கக் கூடாது. அப்படி வைக்க நேர்ந்தால் அது பர்யுஷிதம்-பழையது-என்ற தோஷமுள்ளதாகும்.

163. பகலில் இறந்தால் இறந்ததிலிருந்து 3 யாமத்திற்குள்ளும் இரவானல் 9 நாழிகைக்குள்ளும் தஹநம் செய்யலாம். இரவு 9 நாழிகைக்கு மேல் தஹநம் செய்யக் கூடாது மரித்த ஜீவனை 2 யமகிங்கிகரர்கள் அதிவேகமாக யமலோகத்திற்கு அழைத்துச் செல்கின்றனர்.

164. இரவிலோ பகலிலோ ரொம்ப நேரம் மரித்த உடல் வீட்டில் தங்க நேர்ந்தால் பர்யுஷிததோஷம் அகல 3 க்ருச்ரம் தத்தம் செய்து பஞ்ச கவ்யத்தால் பிணத்தை ஸ்நாநனம் செய்வித்து மறுபடி சுத்த ஜலத்தால் ஸ்நாநம் செய்வித்த பின் தஹிக்க வேண்டும்.

165. மரித்த உடலை அக்நியில் ஹோமம் செய்வதாக ஐதிஹ்யம். அதைத் தூக்கி ஹோமம் செய்ய முடியாதல்லவா? அதனல் சிதை அடுக்கி பிணத்தை அதன் மேல் வைத்துத் தீயிட வேண்டும்.

166. தக்ஷிணாயணத்தில், க்ருஷ்ணபக்ஷத்தில், இரவில், கட்டில்மீது உயிரிழந்தால் ஒவ்வொரு தோஷத்திற்கும் 3, 3 க்ருச்ரம், அல்லது ஒவ்வொரு க்ருச்ரமாவது செய்த பிறகே தஹநம் செய்யவேண்டும். யமனிடம் அவனைக்காட்டி இவன் ஆயுள்தான் முடிந்ததா? இவரைத் தானா கொண்டுவரச் சொன்னீர் என்று கேட்டு அவர் 'ஆமாம்' என்று கூறியவுடன் இறந்த ஜீவனை மறுபடியும் கிங்கரர் பூமியில் கொண்டு விட்டு விடுகின்றனர். வேறு ஜீவனைத் தவறுதலாகக் கொண்டு வந்திருந்தால் அவனைத் தன் உடலில் புகுந்துவிடும்படிச் செய்வர். அவர்க்கு அந்த சக்தி உண்டு. ஆதலால் அதற்குள் அந்த உடலைக் தஹிக்கலாகாது.

167. இறப்பதற்கு முன் என்ன செய்யவேண்டும்? மரணம் மனிதனுக்கு நிச்சயம். ஸமீபத்தில் மரணம் வரும் என்று தெரிந்தபோது ப்ராயச்சித்தம் செய்து கொள்ள வேண்டும். அது நாம் இதுவரை செய்த பாபத்தை அகற்றி கஷ்டமில்லா திருக்கச்செய்யும். இந்த கர்மா மிக முக்யமானது. அவச்யம் செய்யவேண்டும்.

168. சக்தி இருந்தால் இறக்கப் போகின்றவனே ஸ்நானம் செய்து ஸங்கல்பம் செய்துகொண்டு தன் கையால் ப்ராம்மணர்களுக்குத் தாநம் செய்யவேண்டும். சக்தி இல்லாத பக்ஷத்தில் புத்ரன் அல்லது கர்மா செய்ப வரும் இதைச் செய்யலாம்.

169. இந்த ப்ராயச்சித்தம் செய்துகொண்ட பின் அவர் 3 நாள் பிழைத்திருந்து பிறகு இறக்க நேர்ந்தால் மறுபடியும் ப்ராயச்சித்தம் செய்துகொள்ள வேண்டும். அந்த 3 நாளிலும் பிறகும் அவர் ஏதேனும் மநஸினாலாவது வாக்காலாவது, உடலினாலாவது பாபம் செய்யக் கூடும். ஒரு பாபமும் செய்யாமலோ, செய்ய சக்தி

இல்லாமலோ இருந்தால்கூட செய்யவேண்டிய ஸ்நாந ஸந்த்யாதிகளை விடக்கூடு மல்லவா? ப்ராயச்சித்தம் செய்துகொண்டவர் பிழைத்துவிட்டால் தோஷமில்லை.

170. இறப்பதற்கு முன் நாமே செய்யும் தாநமே நமக்குப் பரம நண்பனும். ஆதலால் எது எது நமக்கு மறு உலகிலும் மறு பிறப்பிலும் வேண்டுமோ அவை களைத் தாநம் செய்யவேண்டும்.

171. நமக்கு செய்ய சக்தி இல்லாவிடில் புத்ரர்முதலி யவர் செய்யலாம். துளஸி, சிறந்த ப்ராம்மணர் முதலிய உத்தம வஸ்துக்களை இறப்பவருக்குத் தர்சனம் செய்து வைக்கவேண்டும். காதில் ராம ராம என்று கூற வேண் டும். முடிந்தால் நம்மை கூறும்படிச் செய்யலாம். கங்கா தீர்த்தத்தை நம் உடலில் ப்ரோக்ஷித்து உள்ளேயும் சாப் பிடும்படி கொடுக்க வேண்டும்.

172. ப்ராணன் விரைவில் போய்விடும் என்று தெரிந்தால் படுக்கையில் கட்டிலில் படுக்கவிடக் கூடாது. உள்ளேயும் படுக்கவைக்கக் கூடாது. ரேழியில் தர்ப்பை யைப் போட்டு அதன்மீது படுக்கவிடவேண்டும். கட்டி லில் படுத்துக்கொண்டு உயிரை விட்டதால் பரீக்ஷித் ராஜன் நரகத்தை அடைந்தான். தேவி பாகவத நவா ஹத்தை ஜநமேஜயன் செய்து அவரை ஸ்வர்க்கம் அனுப் பினன் என்று தேவீ பாகவதம் கூறுகிறது.

173. புண்யசாலிகளாக இருந்தால் அநாயாஸமாக ப்ராணன் போகும். முகத்திலுள்ள த்வாரங்கள் வழியா கவே ப்ராணன் செல்லும். பாபிகளுக்குப் பலநாள் கஷ் டப்பட்டு ப்ராணன் போகும். மலஜல வழிகள் மூலம் செல்லும். ப்ரும்ம க்ஞானிக்கு சிரஸ் வெடித்து ஸுஷும்ந நாடி வழியாகப் போகும். த்ரோணரது ஜீவன் அங்ஙனம் சென்றதாக பாரதம் கூறுகிறது.

174. போகின்றது என்ப தெது? ஜீவன், மநஸ், 5 க்ஞானேந்த்ரியம், 5 கர்மேந்த்ரியம், 5 ப்ராணன் இவைகளுடன் அவரவர் செய்த கர்மா இவைகள் ஒன்றுகச் சேர்ந்து ஒரு சிறு பொறிபோல் லோகாந்தரம் செல்கிறது, ஜீவன் முக்தி அடைந்தவருக்கெல்லாம் இங்கேயே லய மாகிவிடும். மேலே செல்லாது. உபாஸகர்களது ஜீவன் ப்ரும்மலோகம் சென்று அங்கே வெகு காலம் தங்கி ப்ரும்மவிசாரம் செய்து ப்ரும்மாவுடன் முக்தி பெறும். 48 ஸம்ஸ்காரமும் ஒழுங்காக நடத்தினுலும் பூதானுதி மஹா தானங்களைச் செய்தாலும் ப்ரும்மலோகஞ் செல்லலாம். ஆனுல் வேதாந்த க்ஞானமில்லாதவர் திரும்ப வேண்டியது தான்.

175. ச்வாஸம் உண்டாவது? ஸாதாரண மரண காலத்தில் கழுத்தில் உள்ள உதாநன் என்பவர் ப்ராணன் போகாதபடி வழியைத் தடுத்திருப்பவர். அவர் வழி திறந்து விடும்வரையிலும், இந்த ஜீவன் விட வேண்டிய மூச்சு ஆகிற வரையிலும் ப்ராணன் கிளம்பிக் கிளம்பி அடங்கும். இதே ச்வாஸங் கண்டு விட்டது. இனி பிழைக்க மாட்டான் எனப் படுகிறது.

176. ஜீவன் எப்படி உடலை விடுகிறது? பஞ்ச ப்ராணனில், ஹ்ருதயத்தில் ப்ராணன், மலவழியில் அபா நன், தொப்புளில் ஸமாநன், கழுத்தில் உதானன், சரீர மெங்கும் வ்யாநன் தங்கியிருக்கிறுன். ப்ராணன் போவ தற்கு முன் வ்யாநன் ரத்தத்திலிருந்து திரும்பி ப்ராண னிடம் வருகிறுன். ரத்தம் சுண்டுவதால் அப்போது தான் மரணவலி ஏற்படும். அபாநன் ஸமானன் இவர்களும் இங்கு வந்து சேரும் போது ஜீர்ணம், மலஜலம் நின்று விடும். ஒரு வீட்டை ஒழித்துக் கொண்டு வேறு வீடு செல் பவர் எப்படி எல்லா ஸாமான்களையும் நடு வீட்டில்

கொண்டு வைப்பார்களோ அப்படி எல்லாம் ஹ்ருதயத்தில் வந்து தங்கும்.

177. பால் இறங்காமை : உதானன் ப்ராணனுக்கு வழியைத் திறந்து விடும் போது பால், ஜலம் விட்டால் வாயால் வழிந்து வெளியே வந்து விடும். அதற்கு முன்பும் பின்பும் வாயில் விட்டது உள்ளே செல்லும். ஸகல இந்த்ரிய சக்திகளும் ஒடுங்கி மனதில் லயமாவதால் கண் பார்க்காது. காது கேளாது நாவு உண்ணுது. தோல் உணராது. மூக்கு முகராது.

178. ஜீவன் ஜோதிர் மயமானதால் அவன் உள்ள வரை உடல் அல்லது மார்பு சூடாக இருக்கும். க்ரமமாக வ்யாநன் மூலமாக எந்த எந்த இடத்தை ஜீவன் விடு கிருனே அந்தந்த இடம் அதி சீதலமாகயிருக்கும். தாது அடங்கினுலும் இந்த்ரியங்களது வேலை ஓய்ந்தாலும், ச்வாஸம் நின்றது போலிருந்தாலும் ப்ராணன் போய் விட்டதென நிச்சயமாகக் கூறமுடியாது. வாயில் பால் அல்லது நீர் விட்டுப் பார்ப்பது மூக்கில் பஞ்சை வைத்துப் பார்ப்பது ஆகிய பரீக்ஷை செய்வதுண்டு. இவைகளைக் கொண்டு மாத்ரம் இறந்ததாக எண்ணலாகாது. (தற்கா லத்தவர் வைத்யர் சொன்னுல்தான் நம்புவர்.) சிலர் கண் ணில் மிளகு அல்லது லவங்கத்தை அறைத்துத் தடவுவர், ப்ராணன் இல்லாவிடில் ஜலம் வராது. ஜலம் வந்தால் ப்ரா ணன் இருப்பதாக அடையாளம். இப்படிச் செய்வது நல்லதல்ல. எனினும் வேறு வகையின்றி பரீக்ஷிக்க வேண் டிய அவச்யம் ஏற்பட்டால் சிலர் செய்து பார்ப்பதுண்டு.

179. வேறு உடலுண்டா ? ஜீவன் வேறு உடலைப் பிடித்துக் கொண்டே இவ்வுடலை விடுவதாகச் சில விடங் களில் கூறப்படுகிறது. ஆதலால் ஜீவன் பரலோகம் போவதில்லை, அவருக்காக ச்ராத்தம் செய்வது அவச்

யமா ? என சிலர் ஸந்தேஹிப்பர். விடை : குடியிருந்த வீட்டை விட்டுக் கிளம்ப நமக்கு மனம் வராதது போல் ஜீவனுக்கு இவ்வுடலை விட மனம் வருவதில்லை. ஆதலால் இவனுக்கு அடுத்த படியாக வரப்போகின்ற உடலைப் பட மாக யமகிங்கரர் காட்டியவுடன் இவ்வுடலை ஜீவன் விடு கிறது. ஆனால் ஸூக்ஷ்ம சரீரமே யமலோகம் கொண்டு போகப்பட்டு திருப்பப் படுகிறது.

180. ஜீவன் இறப்பதில்லை. உடலே இறக்கிறது. நாம் உயிருடன் இருக்கும் போது இளமைப் பருவம் போகிறது. யௌவனம் வருகிறது. அதுவும் அகன்று கிழத்தன்மை வருகிறது. ஆனால் நம் உடல் அழிவதில்லை. பழய வஸ்த்ரத்தை எறிந்து புதுவஸ்த்ரம் உடுப்பது போலாகும், இவ்வுடலை விட்டு, புதிய உடலை தரிப்பது என கீதாசார்யனும் கூறுகிறார்.

181. போகும் வழி 2: உத்தர மார்க்கம், தக்ஷிண மார்க்கம் என இறந்தவர் போக இரண்டு வழிகள் உண்டு. இதையே தேவயானம், பித்ருயானம் என்றும் அர்ச்சி ராதி மார்க்கம், தூமாதி மார்க்கம் என்றும் கூறுவர். உத்தர மார்க்கமாகச் செல்பவர் புண்யம் செய்தவர். அவர் புண்யத்திற் கேற்றபடி யமலோக வழியாக ஸ்வர்க்கம் அல்லது மற்ற மஹர் ஜனோ லோகம், தபோலோகம், ப்ரும்ம லோகஞ் செல்வர். பாபிகளோ யமலோகஞ் செல்வர்.

182. ப்ரும்மலோகம் செல்பவர் உத்தராயணத்தில் (தை முதல் ஆனிவரை உத்தராயணம்) சுக்ல பக்ஷத்தில் பகலில் இறப்பர். அவரைப் பகல் தேவதை சுக்லபக்ஷ தேவதையிடமும், அது உத்தராயண தேவதையிடமும், அது வர்ஷ தேவதையிடமும் கொண்டு விடும். அங்கிருந்து

ப்ரும்மலோகம் செல்வான். உபனிஷத்வித்யை உபாஸநம் செய்தவனுக்கும் அதே அர்ச்சிராதி மார்க்கம்.

183. கர்ம மார்க்கத்தில் ஈடுபட்டவர் இறவில் இறப்பர். அந்த இரவு தேவதை, க்ருஷ்ணபக்ஷ தேவதையிடமும், அது தக்ஷிணாயண தேவதையிடமும், அது ஸம்வத்ஸர தேவதையிடமும், அது யமலோகம் அல்லது ஸ்வர்க்கத்திற்கும் அழைத்துச் செல்லும். இதே தக்ஷிண மார்க்கம் அல்லது தூம மார்க்கம் எனப்படும்.

184. இரவில் க்ருஷ்ணபக்ஷத்தில், தக்ஷிணாயணத்தில் இறந்த அனைவரும் யமலோகம் அல்லது ஸ்வர்க்கந்தான் செல்வார்களோ? உபாஸகனாகவும் மஹாதானம் செய்தவனாயினும் ப்ரும்மலோகம் செல்ல மாட்டாரா? என நினைக்கலாகாது. அங்ஙனமே பகலில் சுக்லபக்ஷத்தில் உத்தராயணத்தில் இறந்தவர் அனைவரும் ப்ரும்மலோகமே செல்வர் எனவும் கூற முடியாது. புண்ய பாபத்திற்கேற்றபடியே லோகம் கிடைக்கும்.

185. பீஷ்மாசார்யாள் உத்தராயணத்தை எதிர்பார்த்துத் தன் உடலை விடாமல் வைத்திருந்தார் எனப் பாரதம் கூறும். அதனால் உத்தராயணத்தில் இறந்தால் தான் ஸத்கதி என எண்ணலாகாது. அது சிறந்த புண்ய கலாம் என்று காட்டவும், தனக் கிஷ்டமான போது உடலை விடலாமெனத் தந்தை அளித்த வரத்தைப் பயன்படுத்தவுமே அங்ஙனம் செய்தார்.

186. சுத்தம் என்பது தெய்வ குணம், நமது உடல், வாக்கு, மனம், நாம் அணியும் ஆடை, உண்ணும் உணவு, கையாளும் பொருள்கள் எல்லாம் சுத்தமாக இருக்க வேண்டும். இவை சுத்தமாக இருப்பது ஆசாரம் என்றும், மாறானது அசுத்தம் அல்லது அனாசாரம் என்றும் கூறப்படும்.

187. தூரமான ஸ்த்ரீ, சண்டாளன் இவர்கள் அருகே வந்தால், உடுத்திருக்கும் வஸ்த்ரத்துடன் ஸ்னானம் செய்தால்தான் உடல் சுத்தமாகும்.

188. சூத்ரர், தீட்டுள்ளப்ராம்மணர், க்ஷவரம் செய்து கொண்ட ப்ராம்மணர், நாய், காக்கை இவைகள் மேலே பட்டால் வஸ்த்ரத்துடன் முழுகவேண்டும். முழுகாமல் செய்யும் கர்மா வீணாகும்.

189. சண்டாளர், தூர ஸ்த்ரீகள் இவர்கள் மேல் பட்டாலும், ப்ரேதத்தைத் தொட்டாலும், அதைச் சுமந்து சென்றாலும் ஸ்னானம் செய்து, புருஷர்கள் புதிய பூணல் தரித்துக் கொள்ளவேண்டும். பின்பே ஸ்வகர்மா செய்ய அர்ஹர் ஆவர்.

190. நமது மலம், ஜலம், பிறர் மலம், ஜலம் நம்மீது பட்டால் உடனே உடுத்திய வஸ்த்ரத்துடன் முழுக வேண்டும்,

191. பட்டு என்பது ஒரு வகைப் புழுவை ஹிம்ஸித்து உண்டாவதானாலும் அது சுத்தம் என்பதே சிஷ்டர் கைப்பற்றி வந்த ஆசாரம் கன்று எச்சில் செய்து ஊட்டிய பாலே சுத்தமாகும். அது எச்சிலல்ல

192. தேனிக்கள் குடித்து மிகுந்த எச்சிலான தேன் அசுத்தமல்ல. சுத்தமானதே. தேவ அபிஷேகத்திற்கு ஏற்றதேயாகும்.

193. காக்கை எச்சத்தால் உண்டானாலும் அச்வத்த மரம் சுத்தமானதே யாகும்.

194. பட்டைத் துவைத்தாலோ வண்ணானுக்குப் போட்டாலோ அது மடிக்கு உபயோகமில்லாமல் போகும். ஆனால் அதன் அழுக்கை எடுக்க அமாவாஸ்யை அல்லது

த்வாதசியில் பயத்தம் பருப்புக் கஞ்சி ஜலத்தால் சுத்தம் செய்தால் மடிக்குறைவில்லே.

195. ச்ராத்தத்தில் வெண்பட்டு தானம் செய்வதும், தரித்துக்கொண்டு கர்மா செய்வதும் மிகச்லாக்யமானது.

196. பஞ்சகவ்யம் : பசுவின் 5 பொருள் ஒன்ருகச் சேருவது பஞ்ச கவ்யம் எனப்படும். ப்ரஸவத் தீட்டு முடிந்தவுடன் ஸ்த்ரீகள் இதைச் சாப்பிட்டால் தான் வைதிக கர்மாவில் ஈடுபடலாம்.

197. கோமூத்ரம் 1 பலம், ½ அங்குஷ்ட (கட்டை விரல்) அளவு சாணம், 7 பலம் பால், 3 பலம் தயிர், 1 பலம் நெய், 1 பலம் தர்ப்பை ஜலம் இவைகள் சேர்ந்ததே பஞ்சகவ்யம், இதைச் சேர்க்க வேத மந்த்ரமுண்டு.

198. பஞ்ச கவ்யத்தைச் சாப்பிட மந்த்ரம் :—

"யத் த்வக் அஸ்திகதம் பாபம் தேஹே திஷ்டதி மாமகே. ப்ராசனம் பஞ்சகவ்யஸ்ய தஹது அக்னிரிவ இந்தனம்."

எனது உடலில் தோல், எலும்பு இவைகளே அண்டி உள்ள பாபத்தை, தீ கட்டையை எறிப்பதுபோல பஞ்சகவ்யம் அகற்றட்டும்.

199. ச்ராத்த விஷய ஆசாரம் : ச்ராத்தம் என்ருல் ச்ரத்தையுடன் (நம்பிக்கையுடன்) நன்கு செய்யவேண்டிய கர்மா என்று பொருள். இதைச் சிலர் திதி, திவஸம் என்பார்கள். தெவசம் என்பதும் ச்ரார்த்தம் என்பதும் தவறு. திவஸம் ச்ராத்தம் என்பதே சரி.

200. இறந்தவருடைய இறந்த மாதத்தில், இறந்த பக்ஷத்தில், இறந்த திதியில் செய்யவேண்டிய கர்மா இது. அதே ப்ரத்யாப்திக ச்ராத்தம் எனப்படும்.

201. ஒரு நாள் 60 நாழிகை கொண்டது. பகல் 30 நாழிகையை 6, 6 நாழிகையாக 5 பாகமாகப்பிரித்து

ஒவ்வொன்றிற்கும் ஒரு பெயர் இடப்பட்டுள்ளது. (1) முதல் 6 நாழிகை ப்ராத: காலம். (2) 7-வது நாழிகை முதல் 12 வரை ஸங்கவ காலம். (3) 13-வது நாழிகை முதல் 18 வரை மாத்யான் ஹிக காலம். (4) 19-வது நாழிகை முதல் 24 வரை அபரான்னம். (5) 25-வது நாழிகை முதல் 30 வரை ஸாயான்னம்.

202. பெரியோர் இறந்த திதி அபரான்னம் என்ற 19 நாழிகை முதல் இருக்கவேண்டும். அன்றுதான் ச்ராத்தம் செய்யவேண்டும். இரண்டு நாளிலும் ஒரு ஸமயம் அபரான்னத்தில் திதி இருந்தால் எந்த நாளில் அதிகம் இருக்கிறதோ அன்றே செய்யவேண்டும்.

203. ஒரு மாதத்தில் இரண்டு திதி வந்தால் பின்னர் தான் ச்ராத்தம் செய்யவேண்டும் என்பது பொதுவான விதி, பின்னர்வரும் திதி ஸங்க்ரமணதோஷம் உள்ளதாக இருந்தால் தோஷமில்லாத முன் திதியில்தான் செய்ய வேண்டும். இரண்டிலும் தோஷமிருந்தால் பின் திதியி லேயே ச்ராத்தம் செய்யவேண்டும்.

204. சித்திரை, வைகாசி, ஆடி, ஆவணி, அற்பிசி, கார்த்திகை, மாசி, ஆகிய 7 மாதங்களிலும் மாத்யான் ஹிக காலத்தில் ஸங்க்ரமணம் ஏற்பட்டால் அந்த திதி தோஷம் உள்ளதாகும் ஆனி. புரட்டாசி மார்கழி, தை, பங்குனி ஆகிய 5 மாதங்களில் மாத்யான்ஹிக காலத் திற்குமுன் ஸங்க்ரமணம் ஏற்பட்டால் அது தோஷமில்லை.

205. ஒரு மாதத்தில் ஒரே திதி இருந்தால் ஸங்க்ர மண தோஷம் பார்க்கவேண்டியதில்லை. அன்றே ச்ராத் தம் செய்யலாம்.

206. இரவு 15 நாழிகைக்குள் ஸங்க்ரமணம் நேர்ந் தால் அந்த திதி தோஷமுள்ளதாம். 15-க்குமேல் ஸங்க்ர மணம் நேர்ந்தால் தோஷமில்லை.

207. இரு தினங்களிலும் அபரான்ன வ்யாப்தி பூர்ணமாக இராவிடில், மறு நாள் குதபகாலத்தில் வ்யாப்தி இருக்குமாதலால் அன்றுதான் செய்யவேண்டும். அபரான்னம் 6-நாழிகையை மூன்ருகப் பிரித்து, 1 காந்தர்வ காலம், 2 குதப காலம், 3 ரௌஹிணேய காலம் எனக் கூறப்படும். ச்ராத்தத்திற்கு குதப காலமே மிகச் சிறந்ததாம்.

208 ஒரு மாதத்தில் திதியே இல்லாவிடில், முன் மாதத்திலுள்ள சாந்த்ரமானப்படி சுத்தமான திதியில் ச்ராத்தம் செய்யவேண்டும். சாந்த்ரமானப்படியும் திதி இல்லாவிடில் அடுத்த மாதம் செய்யவேண்டும்.

209. ஒரே திதியில் தந்தை தாய் இருவருக்கும் ச்ராத்தம் வந்தாலும், அல்லது தீட்டினுல் தடைபட்டு, தீட்டுப் போகும் நாளில் இரண்டையும் ஒன்ருகச் செய்ய நேர்ந்தாலும், தந்தையின் ச்ராத்தத்தை முதலில் செய்து முடித்து, தாயின் ச்ராத்தத்தைப் பின்னர் செய்யவேண்டும். ஒரே சமயலில் இரண்டையும் செய்யலாம்.

210. சாவு தீட்டோ, பிரஸவ தீட்டோ தந்தை தாய் ச்ராத்த தினத்தில் வந்தால் தீட்டுப் போகும் தினத்தில் தான் ச்ராத்தம் செய்யவேண்டும்.

211. சந்த்ர, ஸூர்ய க்ரஹணம் ச்ராத்த தினத்தில் வந்தால், அன்று உபவாஸமிருந்து மறுநாள்தான் ச்ராத்தம் செய்யவேண்டும்.

212. கவனக் குறைவால், ச்ராத்த தினத்தில் ச்ராத்தம் செய்யாம லிருந்துவிட்டால், நினைவு வந்தது முதல் உபவாஸமிருந்து, க்ருச்ராசரணம் என்ற ப்ராயச்சித்தம் செய்துகொண்டு மறுநாளே ச்ராத்தம் செய்யவேண்டும் என்பது சில மஹரிஷிகளது அபிப்ராயம்.

213. வேறுகாரணத்தால் ச்ராத்தம் திதியில் செய்ய முடியாவிடினும், திதி இன்னதென்று தெரியா விடினும் க்ருஷ்ணபக்ஷ ஏகாதசியிலாவது, அமாவாஸ்யையிலாவது செய்யவேண்டும்.

ச்ராத்த சம்பந்தமான நியமம் :—

214. ச்ராத்தம் செய்பவர் ச்ராத்தத்திற்கு ஒரு மாதம் அல்லது 15 நாட்களுக்குமுன் பரான்னம், க்ஷவரம், எண்ணெ தேய்த்துக் கொள்ளல், ஸ்த்ரீ ஸங்கமம் இவைகளைச் செய்யக்கூடாது. குரு, மித்ரன், மாமனார், ஸஹோதரி இவர்கள் அன்னம் பரான்னமாகாது. சாப்பிடலாம்.

215. அவஸரமும் அவச்யமும் ஏற்பட்டால் ஒரு வாரத்திற்கு முன்பேனும் இந்த நியமங்களைக் கைக்கொள்ள வேண்டும். அதம பக்ஷமாக, ச்ராத்தத்திற்கு மூன்று நாள் முன்பேனும் இவைகளைக் கவனிக்கவேண்டும். இது மிக அவச்யமானது.

216. என்ன அவச்யம் அவஸரமிருந்தாலும் ச்ராத்தத்திற்கு முதல் நாள் வபனம், எண்ணெ, பரான்னம், ஸ்த்ரீ ஸங்கமம் இவைகள் கூடாது. இதை மீறிச்செய்தால் பித்ரு சாபத்திற்கு ஆளாகி, ஸந்ததி, ஸம்பத், ஆரோக்யம் முதலியவைகளை இழக்க நேரிடும்.

217. ஔபாஸன அக்னியில் தான் க்ருஹஸ்தன் ச்ராத்தம் செய்யவேண்டும். பத்னி அருகில் இருந்தால்தான் ஔபாஸன அக்னி ஸித்திக்கும். ஆதலால் பத்நி உள்ள இடத்தில்தான் ச்ராத்தம் செய்யவேண்டும் பத்னி இறந்தவருக்கு விதுர ஔபாஸனம் கூறப்பட்டுள்ளது.

கர்பிணியாக இருந்த பத்னிக்குக் கஷ்டம் கூடாது என்று ஒரு ரிஷி பிறந்த வீட்டிலிருந்த மனைவியை அழைக்

காமல், தானும் அங்கு போகாமலும் ச்ராத்தம் செய்தார். அதனல் அவர் ரௌரவ நரகத்தில் பல யுகங்கள் துன்பப் படுகிருர். (அக்னி புராணம்).

218. ச்ராத்தத்திற்கு முன் அந்த பக்ஷ ஆரம்பத்தி லேனும், மூன்று நாட்களுக்கு முன்பாவது ஔபாஸனம் ஆரம்பித்து இரு காலங்களிலும் செய்யவேண்டும். அப் போதுதான் அக்னிக்குப் பலன் உண்டாகும். ச்ராத்த தினத்தில் காலேயேனும் செய்துகொள்ள வேண்டும். ச்ராத்த காலத்தில் செய்வது அதமபக்ஷம்.

219. கூச்மாண்ட ஹோமத்தை ச்ராத்தத்திற்குமுன் செய்வது நல்லது. அது ப்ரூண ஹத்திக்குக் கீழ்ப்பட்ட ஸகல பாபங்களேயும் அகற்றும். கண்ட விடங்களில் சாப்பிட்டது முதலிய பாபங்களே அகற்றி, சுத்தனுக இருந்து செய்தால்தான் பித்ருக்கள் ச்ராத்தத்தை ஏற்று களித்து ஆசீர்வாதம் செய்வர்.

220. கூச்மாண்ட ஹோமம் செய்ய முடியாவிடில், பஞ்ச கவ்யம் அருந்தல், ஸமுத்ரஸ்னனம் செய்தல் (பர்வ காலமானல்), மஹா நதி ஸ்னனம், மற்றுமுள்ள சுத்த மாகச் செய்யக்கூடிய கர்மாக்களேச் செய்து, பிறகு ச்ராத்தம் செய்வது நலம்.

221. ச்ராத்தத்திற்கு முந்திய தினம், ச்ராத்ததினம், மறுநாள் ஆகிய மூன்று நாட்களும் பல்குச்சி கொண்டு பல்தேய்த்து நாக்கை சுத்தம்செய்து, உள்ளே இருந்து பித்தநீர் வெளிவரும்படி பல்தேய்க்கக்கூடாது. (அப்படி செய்தால், உடனே பசி எடுத்துவிடும்) நாற்றம் போக பல்லேக்குழப்பி தேய்த்து வாய்க்கொப்பளிக்கவேண்டும்

222. ச்ராத்தத்திற்கு முன்பு தேவபூஜை, அதிதி பூஜை, விசேஷஸ்னனம், தானம் முதலியவைகளேச் செய் யக்கூடாது. தானம் வாங்கவும் கூடாது. நித்யம் ப்ராத

ஸ்னனம் ஔபாஸனம் செய்யாதவர்கூட ச்ராத்த தினத்தன்ருவது காலையில் ப்ராதஸ்னனம், ஸந்த்யை ஔபாஸன ஹோமம் செய்யவேண்டும். ஒரே ஸ்னனம் செய்துவிடுவோம் என்று ச்ராத்தம் ஆரம்பிக்கும் போது செய்யக்கூடாது. நோயாளிகள் தான் அங்ஙனம் செய்யலாம், மற்றவர் அப்படிச் செய்தால் பித்ரு சாபம் ஏற்படும்.

223. கர்த்தாவே முதல்நாள் இரவு ப்ராம்மணர் புஜித்தபின், மறுநாள், தான் செய்யும் ச்ராத்தத்தில் ப்ராம்மணராக இருக்கவேண்டும் எனக் கோரவேண்டும், அப்படி சொல்லாவிடில் பல துன்பங்கள் ஏற்படுவது ப்ரத்யக்ஷம், சாஸ்த்ரம் பலவாகக் கூறியும், முடிவில் சாஸ்திரம், சிஷ்டாசாரம் இவைகளால் விச்வே தேவருக்காக ஒருவர், பித்ருபிதாமஹ ப்ரபிதாமஹ அல்லது மாத்ரு பிதாமஹி ப்ரபிதாமஹி இவர்களுக்காக ஒருவர், விஷ்ணுவுக்காக ஒருவர் ஆகிய மூன்று பெயர்களை வரிப்பது ஆசாரம். அதிலும் சிலர் விஷ்ணு வரணம் செய்வதில்லை. சிலர் இலை மாத்திரம் போடுவர்.

224. ப்ராம்மணார்த்தம் இருப்பவர் யோக்யதை :வேதம் ஓதியவர், வேதாந்தி, யோகி, அக்னிஹோத்ரம் செய்பவர் ஆகியவர் மிக உயர்ந்தவர். ஸாமவேதி, சுக்லயஜுர்வேதி ஸ்வதர்மம் தவருதவர் தர்ம சாஸ்த்ர புராணம் அறிந்தவர் சாந்தகுணமுள்ளவர் தான் வேதம் ஓதாவிடினும் வேதம் அறிந்தவர் குலத்தில் பிறந்தவர், காயத்ரீ ஜபம் நன்கு செய்பவர் ஆகியவர்களே ப்ராம்மணார்த்தம் சொல்லத் தக்கவர், சிறந்தவர்.

225. ப்ராம்மணர் அகப்படாத காலத்தில், மாதாமஹன், மாமன், மருமகன், ம்மனர், குரு, தௌஹித்ரன் உபாத்யாயம் செய்துவைப்பவர் இவர்களைச் சொல்லலாம்.

தௌஹித்ரன் தகுந்த சிறந்த பாத்ரம் என சில ரிஷிகள் கூறினர். அனுஷ்டானத்திலும் இது உண்டு.

226. யாரைச் சொல்லக்கூடாது : வேதம் அறியாதவர், பத்னீ புத்ரன் இல்லாதவர், தாழ்ந்தவரிடம் வேலை செய்பவர், ராஜாங்கத்தில் வேலை பார்ப்பவர், சூத்ர புரோஹிதர் ஸ்வதர்மனுஷ்டானம் இல்லாதவர், வெண்குஷ்டம், குஷ்டம், சொத்தை நகம், சொத்தைப் பல் உள்ளவர், திருடுபவர். நாஸ்திகர், நபும்ஸகர், மதுபானம் செய்பவர், வாத்யத்தால், பாட்டால் ஜீவிப்பவர். அதிக அங்கமுள்ளவர், அங்கம் குறைந்தவர், " என்னைச் சொல் " என்று கேட்பவர், வேத தேவ ப்ராம்மணத்வேஷி, ஷ நிந்தை செய்பவர், தந்தை தாய் ச்ராத்தத்தை விட்டவர், தேசாந்தரம் சென்று வந்தவர், முதல் நாள் ப்ராம்மணார்த்தம் சாப்பிட்டவர், பாப தானங்களை வாங்குபவர் முதலியவர்களை ப்ராம்மணார்த்தம் சொல்லக்கூடாது.

227. முன் கூறியபடி நற்குணமில்லாதவர்களையும், தோஷமுள்ளவர்களையும் ப்ராம்மணராக வரித்து ச்ராத்தம் செய்தால் அது பித்ருக்களிடம் போய்ச் சேராது. வேதாத்யயனம் இல்லாதவர் ச்ராத்தத்தில் சாப்பிட்டால், அவர் எவ்வளவு பிடிகளைச் சாப்பிட்டாரோ அவ்வளவு இரும்பு குண்டுகளை விழுங்கும்படி நரகத்தில் அவரையும் கர்த்தாவையும் கிங்கரர் ஹிம்ஸிப்பர்.

228. வேதம் அறிந்தவர் கிடைக்காவிடில் வேதஸாரமான காயத்ரியையேனும் நன்கு செய்பவரை வரிக்க வேண்டும். மாஸ்யம் சாப்பிடுவது பாபம் என வைதிகர் அதைவிட்டு, ஆசார அனுஷ்டான மில்லாத நாம் ப்ராம்மணர்களை வைப்பது மிக பாபம்.

229. விச்வே தேவர்களுக்கு முதலில் எல்லா உபசாரங்களையும் செய்யவேண்டும். பிறகே பித்ருகளுக்கு, ஆனால் அவர்களை ச்ராத்தம் முடிந்து எழுப்பி அனுப்பும் போது, முதலில் பித்ருக்களையும், பிறகு விச்வே தேவர்களையும் எழுப்பவேண்டும்.

230. ச்ராத்த ப்ராம்மணர்களுக்குக் கால் அலம்ப, வடக்கு புறத்தில் விச்வே தேவர்களுக்குப் பனிரண்டு அங்குலம் சதுரமாக பசுஞ்சாணியால் மண்டலம் செய்ய வேண்டும். (மெழுகவேண்டும்.)

231. அதற்குத் தென்புறமாக பித்ருக்களுக்கு பனிரண்டு அங்குலம் வட்டமாகப் பசுஞ்சாணியால் மண்டலம் செய்யவேண்டும்,

232. இரண்டிற்கும் இடையில் ஆறு அங்குலம் இடைவெளி விடவேண்டும். ஒருவர் கால் அலம்பிய ஜலம் மற்றவர் அலம்பும் ஜலத்தில் படக்கூடாது. சிலர் இடையில் ஈரவஸ்த்ரம் அல்லது உமியைப் போடுவர்.

233, பவித்ரம் அணிந்துகொண்டே, தேவ மண்டலத்திற்கு அக்ஷதையாலும், பித்ரு மண்டலத்திற்கு எள்ளினுலும் உபசாரம் செய்ய வேண்டும் ப்ராம்மணர்களது பாதத்தை அலம்பும்போது பவித்ரத்தை கழட்டி காதில் வைக்கவேண்டும். தேவகுண்டத்தில் கிழக்கு நுனியாகவும், பித்ரு குண்டத்தில் தெற்கு நுனியாகவும் தர்ப்பத்தைப்போடவேண்டும்.

234. ப்ராம்மணர்களது உள்ளங்கால், கட்டை விரலில் சுக்ரமஸி என்று கூறி நெய்யைத் தடவவேண்டும். கை-அலம்பிவிட்டு, மறுபடி கந்தத்வாராம் என்ற மந்த்ரத்தால் பசுஞ்சாணியைத் தடவேண்டும்.

235. ப்ராம்மணர் கிழக்கு முகமாக உட்கார வேண்டும். கர்த்தா மேற்கு முகமாக நின்றுகொண்டு காலை அலம்பவேண்டும். பத்னி ஜலம்விட, இரு கரங்களாலும் தெற்கிலிருந்து ஆரம்பித்து, பாதங்களை அலம்பவேண்டும்.

236, "ஸமஸ்த ஸம்பத் ஸம்வாப்தி ஹேதவ : ஸமுத்திதாபத்குல தூம கேதவ :, அபார ஸம்ஸார ஸமுத்ர ஸேதவ : புனந்து மாம் ப்ராம்மணபாத பாம்ஸவ :" என்பது முதல் மூன்று சுலோகங்களைக் கூறி அவர்கள் பாதத்தை அலம்ப வேண்டும். ஸமஸ்த ஸம்பத்தைக் கொடுக்க காரணமானதும், நமக்குத் தோன்றும் ஆபத்துக்களைப் போக்குவதும், கரையில்லாத ஸம்ஸார ஸாகரத்தைத் தாண்டுவதற்கு அணைபோலிருப்பதுமான ப்ராம்மணர்களுடைய பாததூளி என்னைப் பவித்திரமாக்கட்டும்,

237. "ஆதி வ்யாதி ஹரம் ந்ருணும் துக்க தாரித்ரிய நாசனம். ஸ்ரீ புஷ்டி கீர்த்திதம் வந்தே விப்ர ஸ்ரீ பாத பங்கஜம்." மனதின் நோயையும், உடலின் நோயையும், அகற்றுவதும், செல்வம், புஷ்டி, கீர்த்தி முதலியவைகளைத் தருவதுமான ப்ராம்மண பாதாரவிந்தத்தை நமஸ்கரிக்கிறேன்.

238. "விப்ரௌக தர்சனுத்ஸத்ய : க்ஷீயந்தே பாபராசய : வந்தனுத் மங்களாவாப்தி : அர்ச்சனுத் அச்யுதம் பதம்." ப்ராம்மணக் கூட்டத்தைக் கண்டவுடன் பாபக் கூட்டம் பறந்தோடும், அவர்களை நமஸ்கரிப்பதால் மங்கள முண்டாகும், அர்ச்சிப்பதால் அழியாத பதம் கிட்டும்.

239. விச்வேதேவர்களை வரணம் செய்யும்போழுது மந்த்ரத்தைக்கூறி முடித்தபின், அவரது வலது கால் முதல் தலைவரை, கீழிருந்து மேலாக அக்ஷதையைப் போடவேண்

டும். விச்வேதேவருக்குச் செய்யும் உபசாரமெல்லாம் யக்ஞோபவீதியாகவே இருந்து செய்யவேண்டும்.

240. பித்ருக்களுக்கு ப்ராசீன வீதமாகவே பூணலைத் தரித்து, ஸகல உபசாரங்களையும் செய்யவேண்டும். பித்ருக்களை வரிக்கும்போது, அவர் தலையின் இடதுபுரம் முதல் கால்வரை மேலிருந்து கீழாக எள்ளைப் போட வேண்டும்.

241, செல்வமுள்ளவர் பெற்றோரது ச்ராத்தத்தில் ஒவ்வொரு வருஷமும் வெண்பட்டு வாங்கி அளிக்கவேண்டும். அல்லது பட்டுக்கரை போட்ட வஸ்த்ரமேனும் தரவேண்டும். மூன்று அல்லது இரண்டு அல்லது ஒன்றேனும் வஸ்த்ர தானம் செய்யவேண்டும். கரையில்லாததைக் கொடுப்பது மத்யமம்.

242. வஸ்த்ரம் கறுப்புக்கரையுள்ளதாக இருந்தால் பித்ருக்கள் நரகம் செல்வர். நம்மைச் சபிப்பர். ஆதலால் சிவப்பு கரையுள்ள வஸ்த்ரத்தைத் தானம் செய்யவேண்டும். வண்ணானுக்குப் போட்டதோ, ஒருவர் உடுத்தியதோ கொடுக்கத்தக்கதல்ல. புதியதாக வாங்கி ச்ராத்தத்தன்று காலை ஸ்நானம் செய்தபின் உலர்த்தித் தரவேண்டும்.

243. வஸ்த்ரம் அகப்படாவிடில், அதன் விலையைக் கொடுக்கலாம். சக்தி இல்லாதவர் சுத்தமான புதுப் பூணலை வஸ்த்ரத்துக்கு ப்ரதிநிதியாக சிறிது தனத்துடன் கொடுக்கவேண்டும்.

244. ச்ராத்தம் ஆரம்பிப்பதற்கு முன்பே பூணலைக் கொடுத்து ப்ராம்மணர்கள் தரித்துக்கொண்டால் அவர்கள் அப்படியே வைத்துக்கொள்ளலாம். வரித்தபின், வஸ்த்ர பிரதிநிதியாக அளித்து அப்போது தரித்துக் கொண்டால், ப்ராம்மணர் மறுநாள் அதை அகற்றி வேறு பூணல் தரித்தால்தான் ஸ்வகர்மா செய்ய அர்ஹராவர்.

245. ச்ராத்தம் ஆரம்பிப்பதற்குமுன் ப்ராம்மணர்களுக்கு எண்ணை கொடுக்கவேண்டும். அது பித்ருக்களுக்கு உபசாரமாகவும், ப்ராம்மணரது சரீர மலம் அகலுவதற்காகவும் ஏற்பட்டதாம். தைல ஸ்னானம் செய்து, மடி உடுத்திய பிறகே ச்ராத்த சங்கல்பம் செய்யவேண்டும்,

246. அங்ஙனமே ப்ராம்மணரது மனஸ் சுத்திக்காக, எள்ளுண்டையும் வாக் சுத்திக்காக தாம்பூலமும் கொடுக்கவேண்டும். இது சாஸ்த்ர ஸம்மதமானாலும், சிலர் ச்ராத்தத்திற்கு முன்பு ஒன்றும் சாப்பிடக்கூடாது என்ற நியமத்தைக் கைக்கொண்டு, இவைகளைக் கொடுப்பதில்லை. அவரவர் முன்னோர் வழக்கமே சிறந்தது.

247. பவித்ரத்தைக் கையில் போட்டுக்கொண்டே ஆசமனம் செய்யக்கூடாது. ப்ராம்மணர் காலையும் பவித்ரம் தரித்துக்கொண்டே அலம்பக்கூடாது. சந்தனம் பூசக்கூடாது. அச்சமயங்களில் வலது காதில் வைத்துக் கொள்ளவேண்டும்.

248. கணுக்கால்வரைதான் ப்ராம்மணர் காலை அலம்பலாம். அதற்குமேல் அலம்பக்கூடாது.

249. ச்ராத்த சமையலை நெய்யினாலேயே எல்லாம் செய்யவேண்டும் நல்லெண்ணை, தேங்காய் எண்ணை உபயோகிக்கக் கூடாதென சில ரிஷிகள் கூறுகின்றனர். சுத்தமான பசும்நெய் அகப்படுவது கஷ்டமாதலாலும், எள்ளை அதிகமாக உபயோகிக்கச்சொல்வதாலும் நல்ல எள்ளு எண்ணையை சிஷ்டர்கள் உபயோகிக்கின்றனர்.

250. தேங்காய் சேர்க்கலாம் என சில முனிவர் சொல்வதால், தேங்காயெண்ணையைச் சிலர் உபயோகிக்கின்றனர். சிலர் தேங்காய் சேர்ப்பதில்லை. அவரவர் முன்னோர் செய்துவந்ததையே நாமும் பின்பற்ற வேண்டும், புதிதாக ஒன்றையும் ஆரம்பிக்கக்கூடாது.

251. பித்ரு சேஷமான அன்னம், பக்ஷயம் முதலிய வைகளைப் பத்துநாள் பங்காளிகள்தான் (தசராத்ரக் ஞாதிகள்) சாப்பிடலாம். மூன்று நாள் தீட்டுக்காரர்கூட சாப்பிடக்கூடாது. தைல பாகத்திற்குத் தோஷமில்லை எனச்சிலர் பக்ஷயங்களை ஏற்பர். மற்றவர் பித்ரு சேஷத்தைச் சாப்பிட்டால், ப்ராயச்சித்தம் செய்து கொண்டால் தான் ஸந்த்யா வந்தனுதி கர்மாவைச் செய்ய அர்ஹராவர்.

252. ஏகோத்திஷ்ட ச்ராத்த சேஷத்தை ஞாதிகள் கூட சாப்பிடக்கூடாது.

253. உளுந்து, கறுப்பு எள், கோதுமை, பயத்தம் பருப்பு, வெல்லம், வெல்லச்சர்க்கரை, ஜீரகம், மிளகு, சம்பாநெல் ஆகியவைகளை ச்ராத்தத்தில் சேர்க்கலாம்.

254. தேங்காய், கடுகு புடலங்காய் விளாம்பழம், வெள்ளேரிக்காய் இவைகளைச்சிலர் சேர்ப்பர். சிலர் சேர்ப்பதில்லை. அவரவர் வழக்கப்படி செய்யவும்.

255. பூஷிணிக்காய், மிளகாய், பெருங்காயம் இவைகள் மிகவும் நிஷித்தமானவை. கூஷ்மாண்டன் என்ற அஸுரன் இறந்தபின் அவன் உடலிலிருந்து உண்டானதால், பூஷிணிக்காய் கூடாது. மிளகாய் நம் தேகத்திற்கு அன்ய தேசத்திலிருந்து வந்ததாலும், ரஜோ குணத்தை வ்ருத்தி செய்யும் வஸ்துவானதாலும், அதுவுங்கூடாது. பெருங்காயம் என்பது, மரங்கள் இந்த்ரனிடமிருந்து வாங்கிய ப்ரும்மஹத்தி ஆதலால், அவச்யம் இதை ச்ராத்தத்தில் சேர்க்கக்கூடாது.

256. பெரண்டை, கருவேப்பிலை, பாகை, வாழை, மாங்காய், இலந்தம்பழம், நார்த்தங்காய், கருணைக் கிழங்கு, சேப்பங்கிழங்கு, எலுமிச்சம்பழம், வெள்ளிக் கிழங்கு, கொத்தவரக்காய், அவரைக்காய், பலாக்காய்

ஆகியவை உத்தமமானவை. உளுந்தும், பலாக்காயும், தேனும் பித்ருக்களுக்கு அதிகமாக ஸந்தோஷத்தை அளிப்பவைகள்.

257. சேர்க்கத்தகாதவை: காராமணி, கொள்ளு, கடலை, துவரை, பூஷிணிக்காய், சுறக்காய், முருங்கை, எருமைபால், தயிர், பெருங்காயம், மாதுளை—ஆன்ஹிக காண்டத்தில் போஜன ப்ரகரணத்தில் வேண்டாமென தள்ளப்பட்டவை - இவை கூடாது.

258. பித்ருக்கள் சாந்த, ஸத்வ குணமுள்ளவர்கள், ஆதலால் ஸாத்விகமான கரிகாய்கள், பழங்கள், கிழங்குகள் ஆகியவைகளையே உபயோகிக்க வேண்டும் என்பது சாஸ்த்ரத்தின் கருத்து.

259. ச்ராத்தம் செய்த தினத்தில் அந்த வீட்டில் ஸ்வஜாதியைத்தவிர மற்றவருக்கு அன்னம் போடக் கூடாது. கருணையாலோ, பிதாவிடம் உள்ள அன்பினுலோ சூத்ரர், பஞ்சமர் முதலியவர்களுக்குச் சிலர் அன்ன மிடுவர். அது தவறு. சாஸ்த்ரம் சொன்னபடி செய்தால்தான் அது பித்ருக்களுக்கு ஸந்தோஷத்தை அளிக்கும். அதை மீறிச் செய்தால் ச்ராத்தம் நஷ்டமாதலால் பித்ருக்களும் சபிப்பர்.

260. திருவிசநல்லூர் அய்யாவாள், ச்ராத்தத்தன்று சண்டாளனுக்கு அன்னமிட்டதாகவும், ப்ராயச்சித்தம் செய்துகொள்ள அவர் வீட்டுக் கிணற்றில் கங்கை வந்ததாகவும் ஐதிஹ்யம் உண்டு.

261. அவர் சாஸ்த்ரத்தை மீறுகிறவர் அல்ல. அவரைச் சோதிக்க பகவான் செய்த லீலை அது. அவர் ச்ராத்ததினம் மாத்ரமல்ல. என்றைக்கும் எவராயினும் பசி என்ருல் உடனே அன்னமிடும் பக்தர். அவர் பெருமையை விளக்கவே பகவான் இங்ஙனம் செய்தார்.

நம் வீட்டிலும் கங்கையை வரவழைக்க முடிந்தால் அல்லது நாம் அப்படிச் செய்யலாகாது.

262. அன்று நாமே தேய்த்த பாத்ரம், அன்று நாமே அலம்பிய இடம், அன்று நாமே உலர்த்திய உடை, காப்பி யில்லாமல் பாகம்செய்வது, காப்பி அருந்தாமல் ச்ராத்தம் செய்வதுபோல் ஆஹாரத்திலும் பல நியமங்கள் உண்டு. அவைகளைக் கவனித்தால்தான் ச்ராத்தம் பூர்ணமாகும். இல்லையேல் அது வீணாகும்.

263. ச்ராத்தத்தில் தாயைப்பெற்ற தாத்தா, மாமா, சிஷ்யன், பெண் வயிற்றுப் பேரன், மருமகன், மாப்பிள்ளை இவர்களை ப்ராம்மணராக வரிக்கக் கூடாது.

264. சில ரிஷிகள் ச்லாக்யமென அனுமதித்த தாலும் சிஷ்ட ஆசாரம் இருபபதாலும், பேரன் முதலியவர்களைச் சொல்லலாம்.

265. ச்ராத்த தினத்திலும் முதல்நாளும் கர்த்தா பல் குச்சியால் பல் துலக்கக்கூடாது. வழிநடக்கக்கூடாது. சுமை சுமக்கக்கூடாது. ஒருவரை வரித்துவிட்டு மறுபடி அவரை வேண்டாமென்று கூறலாகாது. மண்பாத்ரத்தில் சந்தனத்தை வைக்கக்கூடாது.

266. பருப்பு, பாயஸம், நெய் இவைகளை உண் பவரது வலதுபுறத்தில் வைக்கவேண்டும். பருப்பையும் நெய்யையும் தனியாக ஒரு சிறிய இலை கிழிசல்மீது தொன்னையில் வைக்கவேண்டும். உப்புப்பட்ட பதார்த் தங்களை அன்னம் வைக்கும் இலையில் வைக்காமல் முன் இலையில் வைக்கவேண்டும்.

267. பார்வண ச்ராத்தத்தில் புரூரவ ஆர்த்ரவ என்ற விச்வே தேவர்களைப் பூஜிக்கவேண்டும். மாஹாலய ச்ராத் தத்தில் துருருசி என்பவர்களையும், நாந்தியில் ஸத்யவஸ-

என்பவர்களேயும், ஸபிண்டீகரணத்தில் காலகாமுக என்ற விச்வே தேவர்களேயும் பூஜிக்கவேண்டும்.

268. ஏகோத்திஷ்டம், மாஸிகம் ஸபிண்டீகரணம், அனுமாஸிகம், நாந்தீ, கயா ச்ராத்தம் முதலியவைகளில் அபிச்ரவணம் கூடாது.

269. விச்வே தேவராக வரிக்கப்பட்டவர், பித்ரு தேவராக வரிக்கப்பட்டவர் கை அலம்பிய பிறகே தம் கையை அலம்பவேண்டும். ஆசமனமும் அப்படியே.

270. ப்ராம்மணர்கள் சாப்பிடும்போது எச்சல் இன்னெரு இலேயில் விழுந்துவிட்டால், இரு இலேகளேயும் அவர்கள் கையால் தொடக்கூடாது. இலேகளே எடுத்து எறிந்துவிட்டு, சாணியால் சுத்தம்செய்து வேறு இடத்தில் இலே போட்டு பரிமாறி கை அலம்பி மறுமுறை பரிஷேசநம் செய்து புஜிக்கவேண்டும்.

271. ப்ராம்மணர் சாப்பிட்டு, மற்ற உபசாரங்களேச்செய்து அனுப்புவதற்குள் ஹோமம் செய்த அக்னி அணேந்துவிட்டால், அன்று உபவாஸமிருந்து மறுநாள் மறுபடியும் அதே ச்ராத்த்தைச் செய்யவேண்டும்.

272. வாயஸ பிண்டத்தைக் காக்கை எடுப்பதற்குள் இதர ஜந்துக்கள் எடுத்தாலும், நாய் உண்டாலும், சூத்ரர் முதலியவர் பார்த்தாலும் அன்று உபவாஸமிருந்து மறு நாள் ச்ராத்தம் செய்யவேண்டும்.

273. ப்ராம்மணர்களுக்கு பக்ஷ்யம், அன்னம் முதலியவைகளில் பங்க்தி பேதமில்லாமல் ஸமமாக பறிமாற வேண்டும். தக்ஷிணேயில் அவரவர் யோக்யத்தைக் கேற்றபடி கொடுக்கலாம். ஆனல் சிஷ்டர்கள் அதிலும் ஸமமாகவே அளிப்பர்.

274. பிண்டப்ரதானம் ஆனபின்பு மிகுதி பருக்கையை மந்த்ரங்கூறி உட்கொள்ளவேண்டும். அதை உண்டபின் பூஜை வைச்வதேவங்களைச் செய்யலாம். அது ச்ராத்த அங்கமானதால் குற்றமில்லை சிலர் முகர்ந்து போடுவதுண்டு. குலாசாரப்படி செய்வதே உத்தமம்.

275. புத்ரனில்லாதவர் நடுப்பிண்டத்தைப் பத்னிக்கு அளித்து அதற்குறிய அபாந்த்வா என்ற மந்திரத்தைச் சொல்லி சாப்பிடும்படி செய்தால் ஸந்தானமுண்டாகும். மிகுதி பிண்டங்களை அக்னி அல்லது ஜலத்தில் போட வேண்டும். தீர்த்த ச்ராத்தத்தில் ஜலத்திலேயேதான் போடவேண்டும்

276. ச்ராத்த சமயல் செய்த பாத்ரங்களைச் சூத்ரர் தேய்க்கலாகாது. ப்ராம்மணர் சாப்பிட்ட இலையை பூமியில்தான் புதைக்க வேண்டும். அந்த எச்சில் இலையிலுள்ளதைச் சூத்ரர் தொட்டாலோ சாப்பிட்டாலோ, நாய் தின்ருலோ ச்ராத்தம் நஷ்டமாகும்.

277. ப்ராம்மணர் சாப்பிட்ட இலையை, ப்ராம்மணர் ஸ்வஸ்திவாசனம் சொல்ல ஆரம்பிப்பதற்குள் எடுத்து விடவேண்டும். பிண்ட ப்ரதானமானபின் சுத்தி செய்ய வேண்டும்,

278. ப்ராம்மணர் ச்ராத்தம் முடியும்வரை ஒருவரை ஒருவர் தொடக்கூடாது, மௌனமாகப் புஜிக்கவேண்டும். சமயல் நன்ருக இருக்கிறது என்று ப்ராம்மணர் கூறினல் பித்ருக்கள் புஜிக்கமாட்டார்கள்.

279. விச்வே தேவர் இலைக்குமுன் ஜலத்தால் ஒரு கோடுபோட்டு அன்னத்தை இறைப்பதுபோல் தொடர்ச்சியாகவைத்து, அதன்மீது சுத்தஜலத்தை விடவேண்டும். இதற்கு விகிரான்னம் எனப் பெயர்.

280. அஸோமபாச்ச யே தேவா: யக்ஞ பாக விவர்ஜிதா: | தேஷா மன்னம் ப்ரதாஸ்யாமி விகிரம் வைச்வ தேவி கம். || கருத்து :— "ஸோமபானம் செய்யாததால் யாகத்தில் பாகமில்லாத தேவர்களுக்கு இந்த விகிரான்னத்தை அளிக்கிறேன்.

281. பித்ருக்கள் இலைக்கு எதிரில் எள்ளு ஜலத்தை விட்டு, அதன்மீது முன்போல் அன்னத்தைபித்ரு தீர்த்தத்தால் வைக்கவேண்டும். அதன்மீது எள்ளு ஜலம்விட வேண்டும். அது பைத்ருக விகிரான்னம் எனப்படும்.

282. "அஸம்ஸ்க்ருத ப்ரமீதா யே த்யாகின்யோயா: குலஸ்த்ரீய: | தாஸ்யாமி தேப்யோ விகிர மன்னம் தாப் யச்ச பைத்ருகம்" || கருத்து :— ஸம்ஸ்காரம் இல்லாமல் இறந்த பித்ருக்களுக்கும், த்யாகினிகளான குலஸ்த்ரீகளுக்கும் பைத்ருகமான விகிரான்னம் தருகிறேன்.

283. விகிரான்னம் வைத்தபின் பவித்ரத்தைக் காதில் வைத்துக்கொண்டு, இருமுறை ஆசமனம்செய்து, தெற்கு நுனியாக தர்ப்பத்தை வைத்து, அதன்மீது வாயஸ பிண்டம் வைக்க வேண்டும். அதைக் காக்கைக்கு வைக்க வேண்டுமானதால் "வாயஸ பிண்டம்" என்று அதற்குப் பெயர்.

284. "யே அக்னி தக்தா: யே அனக்னி தக்தா: யே வா ஜாதா; குலேமம | பூமௌ தத்தேன பிண்டேன த்ருப்தா யாந்து பராங்கதிம்," || கருத்து :—என் குலத்தில் எவர் பிறந்தவரோ, எவர் அக்னியால் கொளுத்தப் பட்டவரோ, எவர் அக்னியால் கொளுத்தப்படாதவரோ, அவர்கள் பூமியில் வைக்கப்பட்ட பிண்டத்தால் த்ருப்தியடைந்து நற்கதி பெறட்டும்.

285. பூமியில் நாய் வராதவிடத்தில், நீசர் கண்ணில் படாத விடத்தில், ஜலம் விட்டுவைத்து, உபவீதம்செய்து

கொண்டு காக்கையைக் கூப்பிட வேண்டும். யமதர்ம ராஜன் ஒரு சமயம் காக்கைரூபம் பூண்டார். அதனுல் அச்சமயமவர் காக்கைக்குப் பிண்ட மளித்தால், பித்ருக் களுக்கு யமபாதை இருது என்ருர். ஆதலால் ச்ராத்தத் தில் வாயஸ பிண்டமும், நித்யம் காக்கைக்கு அன்னம் போடுதலும் அவச்யமாம்.

286. பீஷ்மரும் ஸ்ரீராமனும் தம்தம் பித்ரு ச்ராத்தத் தில் இந்த பிண்டம் வைக்கும்போது,அவர்கள் பிதாத்ருக்கள் தம் கைகளை நீட்டினுர்கள். "பூமியில்" என்று மந்த்ரம் கூறுவதால், சாஸ்த்ர விதியை மீறமாட்டோம் என்றனர். ஆதலின் நாமும் விதிப்படி நடக்கவேண்டும். ச்ராத்தத் தில் பித்ருக்கள் வருவதை நம்பவேண்டும்.

287. காக்கை கிழக்கு முகமாக பிண்டத்தை எடுத் தால் செல்வம் உண்டாகும். தென்புறம் எடுத்தால் நோய் வரும். மேற்குபுறம் எடுத்தால் வெளியூர் செல்வோம். வடபுறம் எடுத்தால் ஆயுஸ் வ்ருத்தியாகும். பிண்டத்தை எடுக்காமலே இருந்தால் குடும்பத்தில் துன்பம் ஏற்படும்.

288. பித்ருக்களைப் பார்த்து "அன்ன சேஷை: கிம்க்ரியதாம்?"-மிகுதி அன்னத்தை என்ன செய்வது? என்று கேட்க வேண்டும். அவர்கள் "இஷ்டை: ஸஹ புஜ்யதாம்"--இஷ்டர்களுடன் புஜி என்பார்கள். இதைக் கொண்டு, பித்ரு சேஷத்தை இஷ்டமானவர், பங்காளி இல்லாதவர்கூட புஜிக்கலாம் என சிலர் பொருள் கொள்வர். அது தவறு.

289. பத்துநாள்பங்காளி தவிற மற்றவர் பித்ரு சேஷத்தை புஜிக்கக் கூடாதென சாஸ்த்ரங் கூறுவ தாலும் அங்ஙனமே சிஷ்டர் அனுஷ்டிப்பதாலும், நாமும் அப்படியே செய்யவேண்டும். இஷ்டர்களுடன் சாப்பிடு அன்ன சேஷத்தை என்ற பித்ருக்கள் சொல் வீணுகுமோ

என்று எண்ணவேண்டாம். அன்று பாகம் செய்த பொருள்களுக்கு மாத்ரமல்ல அவர் உத்திரவு, அடுத்த ஆண்டு அவர் வரும்வரை அதிதிகளுக்கும் இஷ்டர்களுக்கும் அன்னமளித்து வாழ் என பொருள்.

290. அன்னசேஷம் என்பது பக்வமான அன்னம் பற்றியே எனில் இஷ்டர் என்பதற்கு வெறுக்கத்தகாத பகைமையில்லாத இஷ்டமான பங்காளியுடன் புஜி என்று பொருள். ஆதலால் பங்காளியில்லாதவர் பித்ரு சேஷத்தை சாப்பிடக்கூடாது.

291. ஏகாதசியில் ச்ராத்தம் வந்நால் கர்த்தாவும் அவன் மனைவி மக்களும் அவச்யம் ச்ராத்த சேஷத்தைப் புஜிக்கவேண்டும். மாதமிருமுறை வரும் ஏகாதசியைவிட ஆண்டுக்கோர்முறை வரும் ச்ராத்தம் அபூர்வமானது. பித்ருசேஷம் அருளைத்தரும். ஏகாதசி வ்ரத பலனும் உண்டாகும்

292. விதவைகள் தன்கணவனுக்கு ச்ராத்தம் ஏகாதசியில் செய்தால் அவர்களும் ச்ராத்த சேஷத்தைப் புஜிக்கவேண்டும். வ்ரதமே பெரிதெனக்கருதி சாப்பிடாமல் விட்டால் பித்ருக்களும் கர்த்தாவும் மறு உலகில் அசுத்தமான வஸ்துவைச் சாப்பிடும்படி ஏற்படும்.

293. தந்தை ஸகோதரன் ஆகியவர்களுக்கு ஏகாதசியில் ச்ராத்தம் நேர்ந்தால் ஸுமங்கலியான பெண் அல்லது ஸகோதரி ச்ராத்த சேஷத்தைச் சாப்பிடலாம். விதவையானல் சாப்பிடக்கூடாது.

294. மாமனர், அம்மான் இவர்களது ச்ராத்த சேஷத்தை மருமகன் உண்ணலாம். ஆனல் ஏகாதசி, தன் பித்ருச்ராத்த பக்ஷமானல் அதைச் சாப்பிடக்கூடாது.

295. பழம், பால், தயிர், மோர், நெய், தேன், பக்வம் செய்யாத கறிகாய் இவைகளுக்கு ச்ராத்த பித்ரு சேஷ தோஷம் கிடையாது.

296. ப்ராம்மணார்த்தம் சாப்பிட்டபின் உடனே கால் அலம்பி ஆசமநம் செய்து 10 முறை காயத்ரியை ஜபம் செய்து ஜலத்தைச்சாப்பிடவேண்டும். இல்லேயேல் மாலே ஸ்ந்த்யாவந்தனம் செய்ய அவருக்கு அர்ஹதையில்லே.

297. அங்ஙனம் காயத்ரீ ஜபஜலம் அருந்தி சுத்த ஞனுலும் அன்று மாலே ஔபாஸநம் செய்ய அவருக்கு அர்ஹதை கிடையாது. சிஷ்யன் அல்லது மனேவியைக் கொண்டே செய்விக்கவேண்டும். அன்று கோவிலுக்கும் போகலாகாது.

298. தக்ஷிணே தந்தபின் பித்ருக்களேப் பார்த்து வேண்டுகிறோம்,

"தாதாரோ நோபி வர்த்தந்தாம் வேதாஸ்ஸந்ததிரேவ ந:
ச்ரத்தாச மாவ்யபகாத் பஹுதேயஞ்ச நோஸ்து ||

அதன் கருத்து:— "பித்ருக்களே! எனக்குச் செல்வம் அளிப்பவர், வேதங்கள், ஸந்தநி இவை வ்ருத்தியாகட்டும் ச்ரத்தை என்னேவிட்டு அகலாதிருக்கட்டும். தானம் செய்யத்தக்க பொருள் நிறைய இருக்கட்டும்.

அன்னஞ்ச நோ பஹுபவேத், அதிதீகும்ச லபேமஹி |
யாசிதாரச்ச நஸ்ஸந்து மாச யாசிஷ்ம கஞ்சந ||

உண்ணத்தக்க பொருள் நிறையக்கிடைக்கட்டும். நிறைய விருந்தாளிகள் வரட்டும். யாசகர்கள் என்னிடம் வரடடும். நான் யாரையும் யாசிக்கலாகாது.

300. பித்ருக்களாகவும் விச்வே தேவர்களாகவும் அமர்ந்த ப்ராம்மணர் "உனக்கு அவை உண்டாகட்டும்! என்று கருத்திற்கேற்ப இதே ச்லோகத்தைச் சிறிது மாற்றி கூறுவார்கள்.

301. ப்ராம்மணர்கள் ச்ராத்தம் முடிந்து எழுந்து போகும்போது ப்ரதக்ஷிணம் வந்து உபசாரமாக ஒரு ச்லோகத்தையும் அவரவர் மாத்ரு பாஷையில் சில உபசார சொற்களேயும் கூறி வழியனுப்பவேண்டும்.

302. பத்ர சாகாதி தாநேன க்லேசிதா யூய மித்ருசா :
தத் க்லேச ஜாதம் சித்தேது விஸ்ம்ருத்ய க்ஷந்து
மர்ஹத ||

மிக உயர்ந்த உபசாரத்திற்கு ஏற்றவர்களான உங்களே கீரை கறிகாய்களே அளித்து ச்ரமப்படுத்தினேன். அந்த ச்ரமத்தை மநதில் வைக்காமல் மறந்து என்னே மன்னித்து விடுங்கள்.

303. பரேஹநிதர்ப்பணம் : ச்ராத்தம் ஆன பிறகு நியமத்துடனிருந்து அன்றிரவு கழிந்து, மறுதிநம் ஆரம்பமாகும்போது அதிகாலேயில் செய்யவேண்டிய தர்ப்பணமிது. அது பரேஹநி எனப்படும்.

304. ச்ராத்தம். பிண்டப்ரதானம் ஆனவுடனேயே சிலர் இதை செய்து விடுகின்றனர். அது தர்மமில்லே. சாப்பிட்டு பிறகு சிறிது நேரஞ் சென்றபின் தீர்த்ததாஹம் எடுக்கும். அப்பொழுது தர்ப்பணரூபமாக தீர்த்தமளிப்பதே ந்யாயம். "இப்போதே உணவுடனேயே தீர்த்தம் குடித்து விடு, பிறகு கேட்காதே" என்பது போலிருக்கிறது உடனே பரேஹநி தர்பணம் செய்வது.

305. எல்லாமறிந்த பகவானுடைய ஆக்ஞையே சாஸ்த்ரமென்பது. அதன் சொற்படியே செய்யவேண்டும். அதை ஆக்ஷேபிக்கலாகாது. சில ச்ராத்தத்தில் பரேஹநி தர்ப்பணம் வேண்டாமென்கிறது சாஸ்த்ரம், சில ச்ராத்தத்தில் உடனே செய்துவிடு, முன்னமே செய் என்கிறது. சிலதில் மறுநாள் செய்யச்சொல்லுகிறது.

306. பரேஹநி தர்ப்பணமில்லாத ச்ராத்தம் எவை? தந்தை இருக்கிருர். தாய் இறந்தால். தாயுக்குச் செய்யும் ச்ராத்தத்திற்கு அங்கமாக பரேஹநி தர்ப்பண மில்லே. ஸபிண்டீகரண ச்ராத்தம், அநுமாஸிக ச்ராத்தம் நாந்தீ ச்ராத்தம் இவைகளுக்கும் பரேஹநி தர்ப்பண மில்லே.

307. ச்ராத்தம் ஆனவுடனே செய்ய வேண்டிய பரேஹநி தர்ப்பணம் எவை? மாதா பிதாக்களுக்குச் செய்யும் ச்ராத்தம், ஸக்ருன்மஹாளய ச்ராத்தம் தவிர மற்றெல்லா ச்ராத்தங்களுக்கும் உடனே பரேஹநி தர்ப்பணம் செய்யவேண்டும். ப்ராம்ம முகூர்த்தத்தில் எழுந்து கை கால்களேச் சுத்தம் செய்து வாய் கொப் பளித்து ஸ்நாநம்செய்து பரேஹநி தர்ப்பணம் செய்ய வேண்டும். பிறகு ஸ்நாநம் செய்து பல் துலக்கி நித்ய ப்ராத ஸ்நாநம் செய்து நித்ய கர்மாக்களேச் செய்ய வேண்டும்.

308, நாழியாகி ஸந்த்யாகாலம் வந்துவிட்டால் ஸ்நா நம் செய்து ஸந்த்யாவந்தநம் செய்துவிட்டு பிறகே தர்ப்பணம் செய்யவேண்டும். இப்படிச்செய்யும் போது ச்ராத்தத்திற்கேற்ற மடிக்குறைவு ஏற்பட்டால் மறுபடி ஸ்நானம் செய்தே தர்ப்பணம் செய்யவேண்டும்,

309. ச்ராத்தத்தன்று பல்துலக்கலாமா? பல் துலக் காமல் மலஜலங்கழிக்காமல் ஸ்நாநம் செய்யாமல் எந்த கர்மாவையும் செய்யக்கூடாது என சாஸ்த்ரம் கூறுகிறது. ஆனுல் ச்ராத்தத்தன்று பல் துலக்காதே என்றும் சாஸ்திரம் கூறுகிறது. இப்படிச் சாஸ்த்ரம் பரஸ்பர விரோதமாகக் கூறுவதாகத் தோன்றுமல்லவா.

310. ஆனுல் இரண்டிற்கும் பொதுவாக நன்ருக வாய் நாற்றம் போகும்படி வாயைக் குழப்பி வாய் கொப்பளித்

தால் பல் தேய்த்தது போலும் தேய்க்காதது போலும் ஆகும். நன்ருக நாக்கை வழித்துப் பித்த நீர் வா ந் தி யாகும்படி பல் துலக்கிஞல் உடனே பசியெடுத்து விடு மல்லவா ?

311. பொதுவாக அமாவாஸ்யை முதலிய தர்ப் பணங்களில் தாய், தந்தைகளுடன், தாயின் தாய் தந்தை களான மாதா மஹவர்க்கத்திற்க்கும் தர்ப்பணம் உண்டு. ஆனல் ச்ராத்தாங்கமான பரேஹநிதர்ப்பணத்தில் யாரை உத்தே சித்து ச்ராத்தம் நடந்ததோ அந்த வர்க்கத்திற்கு மாத்ரந்தான் தர்ப்பணம், மற்ற வர்க்கத்திற்கில்லை,

312. தாய், தந்தை ச்ராத்த தர்ப்பணம் தவிரக்ரஹண தர்ப்பணந்தவிர, அர்த்தோதய, மஹோதயந் தவிர, காசி ராமேச்வராதி யாத்ரைகளில் செய்யும் தீர்த்த ச்ராத்த தர்ப்பணந்தவிர ஓவ்வோராண்டும் க்ருஹஸ்தன் 96 ச்ராத் தம் அல்லது தர்ப்பணம் செய்யவேண்டும். அதே ஷண்ணவதியாம்,

313. ஷண்ணவதி ச்ராத்தமெனும் தொண்ணூற் ருறு ச்ராத்தத்தில் 12 மாஸப்பிறப்பும், 16 மஹாலய தர்ப்பணமும், 12 அமாவாஸ்யையும் மற்றும் சிலதும் சேர்ந்தது.

314. ஒரே நாளில் இரண்டு தர்ப்பணம் செய்யக் கூடா தென்பது விதி. இதில் இரண்டு தர்ப்பணங்கள் ஒரு நாளில் நேர்ந்தால் எதைச் செய்வது ? எதை விடுவதென ஸந்தேஹம் தோன்றும். மஹாலயத்தில் 16 நாளும் தர்ப் பணம் செய்பவர், அமாவாஸ்யை தர்ப்பணமும். மாஹாலய மும் இரண்டு தர்ப்பணம் செய்யவேண்டும்.

315 ஸங்க்ரமணம், அமாவாஸ்யை, அர்த்தோதயம் அல்லது மஹோதயம் என்ற 4 புண்யகாலமும் ஒன்று சேர்ந்தால் அர்த்தோதய மல்லது மஹோதய தர்ப்பணமே செய்யவேண்டும்.

316, மாஸஸங்க்ரமணத்தைப் பனிரண்டு மாதங்களி லும் விடாமல் செய்பவர் ஸங்க்ரமணத்தில் அமாவாஸ்யை நேர்ந்தால் இரு அயந புண்யகாலம், இரண்டு விஷு ஆக நாலு ஸங்க்ரமண தர்ப்பணங்களைச்செய்து அன்றுதர்சதர்ப் பணத்தையும் விடாமல் செய்யவேண்டும். மற்ற 8 மாதங் களிலும் அமாவாஸ்யை அல்லது ஸங்க்ரமண தர்ப்பணம் செய்யலாம். இரண்டும் ஸமமானவைகளே.

317. அண்ணான் தம்பிகள் பங்கு பிரித்துக்கொண்ட பிறகுகூட சிலர் பெற்ருேர் ச்ராத்தத்தை எல்லோரும் கூடி மூத்தவர் மாத்திரம் செய்ய மற்றவர் பவித்ரம் அணிந்து பேசாமல் அவரருகே இருந்து தானும் ச்ராத்தம் செய்து விட்டதாக நினைப்பர். அது தவறு.

318. பங்கு பிரித்த பிறகு தனித்தனியாக ச்ராத்தம் செய்ய வேண்டியதுதான். தந்தைக்குச் செய்யும் ச்ராத்தத் தில் தாய் ஜீவனுடன் இருந்தால் அவளருகிலே செய்ய வேண்டும். பிள்ளைகள் வேறிடத்தில் தாய்வேறிடத்தில் இருந்தால் தாய் தன் பதியை நாடி இருவருக்கு அன்னமிட வேண்டும்.

319. பங்கு பிரித்தானபின் அல்லது சொத்தில்லாத தால் பங்கு பிரிக்காமல் ஸகோதரர்கள் தனித்தனி குடும்பம் செய்யும்போதும் தனித்தனியாகவே ச்ராத்தம்செய்யவேண் டும், ஒன்ருக சேர்ந்து செய்யநேர்ந்தால் தனித்தனிப் ப்ராம் மணர்களைச் வைத்துத் தனியாக அன்னம் பாயசம் வைத்து மற்ற சமையல்களைச் சேர்த்துக்கொள்ளலாம் தனி ஹோமம் செய்யவேண்டும்.

320. தர்ப்பணமும் அங்ஙனமே தனித்தனியாகத்தான் ஸகோதரர்கள் செய்யவேண்டும். பலர் ச்ராத்த தர்ப்பணம் செய்தால் பித்ருக்கள் ஸந்தோஷமடைந்து எல்லோருக்கும் ஆசீர்வாதம் செய்கின்றனர்.

321. பெரும்பாலும் நாமகரணம் முதல் எல்லா ஸம்ஸ்காரங்களிலும் அதன் அங்கமாக நாந்தீ ச்ராத்தம் என்ற வகையில் பித்ருக்களை ஸந்தோஷப்படுத்த வேண்டுமென சாஸ்த்ரம் கூறுகிறது. பித்ரு ப்ரஸாதத்தால் ஸகல விதமான நன்மைகளும் உண்டாகும்.

---

## 322. பெண்கள் கற்கவேண்டிய ஆசாரம்

1. நெற்றிக்கில்லாமல் ஒரு நிமிஷங்கூட இருக்கக் கூடாது.

2. இரண்டு கைகளாலும் தலையைச் சொறியக் கூடாது.

3. பூஷிணிக்காயை உடைக்கக் கூடாது.

4. கர்ப்பிணிகள் தேங்காயை உடைக்கக் கூடாது. தேங்காய் உடைக்கும் இடத்தில் இருக்கக்கூடாது. இருந்தால்கற்பத்திற்கு பங்கம் ஏற்படும்.

5. ஒரு தம்பதிகளை கூடவிட்டாமல் கலைப்பது மஹா பாபம். அப்படி கலைத்தால் 21 தலைமுறை பால விதவைகளாவார்கள்.

6. இரவில் வீட்டைப் பெருக்கலாகாது. பெருக்கினாலும் குப்பையைத் தெருவில் கொட்டக்கூடாது, பகலில் குப்பையை ஓரிடத்தில் குமித்துவைக்கலாகாது. அப்படி மூலையில் குவித்தால் நல்லநாளில் எல்லோருடனும் கலந்து இருக்கமுடியாமல் விலக்கிவிடும். அதாவது கல்யாணாதி காலத்தில் வீட்டுக்காகாமல் போய்விடுவாள்.

7. அதி காலையில் எழுந்து சாணம் தெளித்து கோலம் போடவேண்டும். இல்லையேல் மறு பிறவியில் பரம ஏழை ஆவாள்.

8. இலை போட்ட வுடன் இலைக்குக்கீழே பசும் சாணி அல்லது வெரும் ஜலத்தால் நாலுமூலை சதுரமாக சுத்தம் செய்யவேண்டும்.

9. கையால் கறிகாய்களையோ அன்னத்தையோ பரிமாறக்கூடாது. கையால் போட்டால் அது கோ மாம்ஸத்திற்குச் சமமாகும்.

10. பதி உத்திரவில்லாமல் தாந தர்மம் செய்தால் அது பயனைத் தராது. உத்திரவின்றி உபவாஸமிருந்தால் பதியின் ஒரு நாள் ஆயுஸ்ஸைக் குறைக்கும்.

11. எந்த வஸ்துவையும் இல்லை இல்லை என்று கூருதே. அதை வாங்கிவாருங்கள் என்றே கூறவேண்டும்.

12 எந்தக் குறையையும் எண்ணி கண்ணீர் விடக்கூடாது, அழுத வீட்டில் செல்வம் நிற்காது.

13. ஒரு இலைக்குப் பரிமாறிய மிகுதியை இன்னொருவருக்குப் பரிமாறக் கூடாது. கரண்டியால் அளித்தால் அந்த தோஷம் வராது,

14. மோரன்னம் சாப்பிட்டபிறகு ஒருமுறை தனியாக அன்னம் எடுத்து விசாரிக்கவேண்டும்

15. தலையை விரித்துப்போட்டுக்கொண்டு உட்காரக்கூடாது. நடக்கவும் கூடாது.

16, கஷ்டம் வந்தபோது எழவு என்று கூறக்கூடாது.

17. கோபம் வந்தால் கடுமையாக நீ சாக, உன்னைக் கொளுத்த, பாம்பு பிடுங்க, கட்டையிலே போக, பாடையிலே வைக்க, நீ அறுக்க, உன் தலையைச் சிறைக்க, மொட்டைக் கம்பெண்டாட்டி முதலியவைகளைக் கூறக் கூடாது.

18. ராமா, கடவுளே இதற்கு நல்ல புத்தியைக் கொடுமே எனக் கூறவேண்டும்.

19. மஞ்சள் குங்குமம் ஸௌமங்கல்யத்தை வளர்க்கும்.

20. கற்பும் ஸதாசாரமும் கணவன் ஆயுளை விருத்தி செய்யும்.

அரிய ஆசார நூல் முற்றிற்று.

சுபமஸ்து

———

R. & Co.

HIGGINBOTHAMS (P.) LTD
Rs